பக்கங்கள்: 12

விலை:20 ரூபா

இது ரகசியம் அல்ல!

காணாமலாக்கப்பட்டோருக் காகக் கடந்த திங்களன்று வடக்கு மாகாணம் முடங்கிய விடயம் சில அரசியல் தரப்புகளை உசுப்பேத்தி யிருப்பதாகத் தகவல்.

ஜெனீவா விவகாரத்தை முன் நிறுத்தி அத்தகைய முடக்கத்தை வடக்கு, கிழக்கு எங்கும் ஏற்படுத் தித் தனது அரசியல் பக்கம் 02 »

# காலைக்கதிர்

Kalaikathir

விழயல் 03 | வள்ளுவர் ஆண்டு 2050 | மாசி 17 | வெள்ளிக்கிழமை 01.03.2019 | கதிர் 117



## அநீதிகளுக்கு எதிராகவேதான் புலிகள் தற்கொலைத் தாக்குதல்கள் நடத்தினர்!

### பாக். நாடாளுமன்றில் பிரதமர் இம்ரான்கான் உரை

இஸ்லாமாபாத், மார்ச் 01

விரக்தி மற்றும் தமக்கு இழைக்கப்பட்ட அநீதிகளினால் ஏற்பட்ட கோபம் காரணமாகவே விடுதலைப் புலிகள் தற்கொலை தாக்குதல்களை மேற்கொண்டனர். மதம் சார்ந்து அவர்கள் தாக்குதல்களை நடத்தவில்லை. இவ்வாறு நேற்று பாகிஸ்தான் நாடாளுமன்றத்தில் தெரிவித்தார் பிரதமர் இம்ரான் கான். பக்கம் 11 »

உள்ளே



வான் தாக்குதல் நடத்தியவர்கள் இவர்கள்தானா? 08 ஆம் பக்கம்



யோகேஸ்வரியின் ஊழல்களை மறைக்க வக்காலத்து வாங்குகின்றார் றெமிடியஸ் 09 ஆம் பக்கம்

# அதிகாரப் பகிர்வு மட்டுமே அரசமைப்பு மாற்றத்தில்!

### பரிந்துரைப்பதற்கு நால்வர் குழு நியமனம் ஜனாதிபதி தலைமையில் நேற்று இணக்கம்

கொழும்பு, மார்ச் 01

பல கட்சிகளுக்கும் இடையில் இணக்கம் காணப்பட்டுள்ள அதிகாரப் பரவலாக்கல் விடயங் களையாவது உடனடியாக நடைமுறைக்கு கொண்டு வரும் வகையில் அரசமைப்பு மாற்றத்தை ஏற்படுத்துவது குறித்து நடவடிக்கை எடுப்பதற்கு நேற்று மாலை ஜனாதிபதி மைத்திரிபால சிறி சேன தலைமையில் நடைபெற்ற உயர்மட்டக் கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டிருக்கின்றது.

இந்த உத்தேச அரசமைப்பு மாற்றத்தில் இடம்பெறக்கூடிய விடயங்களைப் பரிந்துரைப்பதற் காக நான்கு பேர் கொண்ட குழுவும் நேற்றைய கூட்டத்தில் நியமிக்கப்பட்டது. பக்கம் 02 »

## பாகிஸ்தான் படைகளிடம் மாட்டிய இந்திய விமானி இன்று விடுவிப்பு!



இஸ்லாமாபாத், மார்ச் 01

பாகிஸ்தான் இராணுவத்தினரிடம் சிக்கிக் கொண்ட இந்திய விமானி இன்று விடுவிக்கப்பட வுள்ளார். பக்கம் 11 »

### உடுவிலில் வாள்வெட்டு வன்முறை:

## பிரதேச சபை உறுப்பினருடன் 5 பேர் கைதாகிப் பிணையில்!

யாழ்ப்பாணம், மார்ச் 01

வாள்வெட்டு வன் முறைக் குற்றச்சாட்டில் தமிழ ரசுக் கட்சியின் பிர தேச சபை உறுப்பினர் உட்பட 5 பேர் கைது செய் யப்பட் டனர். பக்கம் 11 »

## இலங்கை அரசு தப்பிக்க இடமளிக்கவே கூடாது!



காணாமற்போனோரின் உறவுகள் மன்னாரில் நேற்று ஆர்ப்பாட்டம்

மன்னார், மார்ச் 01

காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவினர்கள் பல வேறு கோரிக்கைகளை முன்னிறுத்தி நேற்று மன்னா ரில் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர். பக்கம் 11 »

## மாகாண சபைத் தேர்தல் இந்த வருடம் சந்தேகமே

### கூறுகின்றார் மஹிந்த

கொழும்பு, மார்ச் 01

இந்த வருடத்தில் மாகாண சபைத் தேர்தல் நடைபெறு வது சந்தேகம் என முன்னாள் ஜனாதி பக்கம் 11 »

## பொறுப்புக்கூறும் பொறிமுறைக்கு உயிர்கொடுங்கள்!

### அரசிடம் கோருகிறார் வேலுகுமார் எம்.பி.

கொழும்பு, மார்ச் 01

"போரால் பாதிக்கப்பட்ட தமிழ் மக்களுக்கு நீதி நிவா ரணம் கிடைத்தாகவேண்டும். மறப் பக்கம் 11 »

## தமிழீழக் கனவு இனிமேல் ஒருபோதுமே பலிக்காது!

### சம்பிக்க ரணவக்க திட்டவட்டம்

கொழும்பு, மார்ச் 01

இலங்கையில் தமிழீ ழம் ஒருபோதும் மலரப் போவதில்லை. தமிழீழக் கனவு ஒருபோதும் பலிக் காது பக்கம் 11 »

## 850 தமிழ் இளையோர் விரைவில் புதிதாக பொலிஸ் சேவைக்குள்

### யாழ்ப்பாண சிவில் பாதுகாப்பு குழுக் கூட்டத்தில் அறிவிப்பு

யாழ்ப்பாணம், மார்ச். 01

வடக்கு மாகாணத்தில் 850 தமிழ் இளையோர்கள் பொலிஸ் சேவைக்குள் புதிதாக இணைக்கப்பட வுள்ளனர் பக்கம் 11 »

## மஹிந்தவை ஜே.வி.பி. விரைவில் சந்திக்கும்

கொழும்பு, மார்ச் 01

அரசமைப்பின் 20ஆவது திருத்தச் சட்டம் தொடர்பாக விவாதிக்க ஜே.வி.பி. எதிர்க்கட்சித் தலைவர் மஹிந்த ராஜ பக்ஷவை சந்திக்கவுள்ளது.

இந்தச் சந்திப்பு அடுத்த வாரம் இடம் பெறும் என்றும் அறிவிக் பக்கம் 11 »

## ரவிராஜ் கொலைக்குக் கருணாவுக்கு 5 கோடி ரூபா வழங்கினார் கோட்டா!

### பரபரப்புத் தகவலை வெளியிட்டார் பொலிஸ் அதிகாரி

கொழும்பு, மார்ச் 01

தமிழ்த் தேசியக் கூட்டமைப் பின் யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் நடராஜா ரவிராஜை கொலை செய்ய 5 கோடி ரூபா வழங்கப்பட்டுள்ளதாக எனப் புல னாய்வுத் தகவல் பிரிவின் முன் னாள் பொலிஸ் பக்கம் 11 »

விளம்பரம் மற்றும் செய்தி தொடர்பு

kalaikkathirnews@gmail.com

https://kalaikathir.online

# புலிகளின் தீக்குள்ளிருந்து வந்தவன் நான்! எனக்கு யாரும் அரசியல் கற்பிக்கக்கூடாது

## வடக்கு அவைத் தலைவர் சீ.வி.கே. சீற்றம்

யாழ்ப்பாணம், மார்ச் 01

ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையில் இலங்கை தொடர்பில் நிறைவேற்றப்பட்ட 30/1 மற்றும் 34/1 ஆகிய தீர்மானங்களை அமுல்படுத்த வேண்டுமென்பதே எங்களுடைய நிலைப்பாடு என்று இலங்கைத் தமிழரசுக் கட்சியின் துணைப் பொதுச்செயலாளர்களில் ஒருவரும் வடக்கு மாகாண அவைத் தலைவருமாகிய சீ.வி.கே.சிவஞானம் தெரிவித்துள்ளார்.

குறிப்பாக தமிழீழ விடுதலைப் புலிகளின் தீக்குள்ளிருந்து வந்தவன் நான். எனக்கு யாரும் அரசியல் கற்பிக்கத் தேவையில்லை என்றும் அவர் குறிப்பிட்டார்.

சட்டநாதர் கோயிலடி, பருத்தித்துறை வீதியில் உள்ள அவரது அலுவலகத்தில் ஊடகவியலாளர் சந்திப்பொன்றை அவர் நேற்று நடத்தினர். -

இதன்போது ஜெனிவாவில் இலங்கைக்கு மீளவும் கால அவகாசம் வழங்கப்படுமா என்ற கேள்விக்குப் பதிலளிக்கையிலைலே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் –

இலங்கை தொடர்பில் ஜெனிவாவில் தீர்மானம் நிறைவேற்றப்பட்டிருக்கின்றது. அத் தீர்மானம் அமுல்படுத்தப்பட வேண்டியது அவசியமானது. ஆகவே இலங்கைக்கு மீள கால அவகாசம் வழங்குவதோ, இல்லையோ என்பதை தீர்மானிப்பவர்கள் நாங்கள் அல்லர். அது எங்கள் யாருடைய சிபார்சிலும் கொடுக்கப்படுவதுமில்லை. நாங்கள் கொடுக்கச் சொன்னதற்காக கொடுப்பதோ அல்லது நாங்கள் கொடுக்கவேண்டாம் என்றதற்காக கொடுக்காமல் விடுவதும் இல்லை, காலஅவகாசம் என்ற பிரச்சினையை நான் அவ்வாறு பார்க்கவும் இல்லை. ஏற்கனவே நான் கூறியது போல ஜெனிவாவில் முன்னர் நிறைவேற்றப்பட்டிருக்கின்ற தீர்மானத்தை அமுல்படுத்த வேண்டும் என்பது தான் எங்களது நிலைப்பாடாக இருக்கிறது. அதற்கமைய இருக்கின்ற தீர்மானத்தை வலிறுத்துவதாகவே எங்கள் நிலைப்பாடு உள்ளது.

இதேவேளை தற்போது அரசியல் கத்துக்குட்டிகள் அரசியல் கற்பிக்க முயல்கின்றன. குறிப்பாக தமிழீழ விடுதலைப் புலிகளின் தீக்குள்ளிருந்து வந்தவன் நான். எனக்கு யாரும் அரசியல் கற்பிக்கத் தேவையில்லை. கத்துக்குட்டி அரசியல்வாதிகள் அரசியலைக் கற்றுக் கொண்டு செயற்பட வேண்டியது அவசியம் – என்றார்.

(மற்றொரு செய்தி 9ஆம் பக்கத்தில்)

# எலும்புக் கூடுகளையும் தேடவேண்டிய சூழ்நிலை

## காணாமற்போனோரின் உறவுகள் விசனம்

'காணாமலாக்கப்பட்ட தமது உறவுகளைத்தேடி போராட்டங்களை முன்னெடுத்த எமக்கு, தற்போது மனிதப் புதைகுழியிலிருந்து மீட்கப்பட்ட எலும்புக்கூடுகளைத் தேடவேண்டிய சூழ்நிலை உருவாகியுள்ளது' என காணாமலாக்கப்பட்டவர்களின் உறவினர்கள் தெரிவித்துள்ளனர்.

காணாமல் ஆக்கப்பட்டோரது உறவினர்கள் பல்வேறு கோரிக்கைகளை முன்னிறுத்தி நேற்று மன்னாரில் ஆர்ப்பாட்டமொன்றை முன்னெடுத்தனர்.

இதன்போது ஊடகங்களுக்குக் கருத்து தெரிவித்த காணாமலாக்கப்பட்டோரின் உறவினர் ஒருவரே இவ்வாறு கூறினார்.

இதன்போது மேலும் கருத்து தெரிவித்த அவர், காணாமலாக்கப்பட்ட தமது உறவுகளைத் தேடி தொடர் போராட்டத்தில் ஈடுபட்டு வருகின்றோம். தற்போது வரை எந்தத் தீர்வும் எட்டப்படவில்லை. இந்நிலையில், மன்னார் மனிதப் புதைகுழியிலிருந்து மனித எச்சங்கள் மீட்கப்பட்டு வருகின்றன. அவற்றில் 6 மனித எச்சங்கள் பரிசோதனைக்காக அமெரிக்காவுக்கு அனுப்பி வைக்கப்பட்டன. அதில் 5 எச்சங்களின் அறிக்கை மாத்திரமே கிடைக்கப்பெற்றுள்ளதாக கூறுகின்றனர். இவ்வாறிருக்க மற்றைய மனித எச்சத்துக்கு என்ன நடந்தது?– என்றார். (ஐ)

## மீனவரின் வலையில் சிக்கிய அரிதான மீன்!



வாழைச்சேனை கடற்பகுதியில் மீனவர் ஒருவரின் வலையில், அரியவகை மீன் ஒன்று சிக்கியுள்ளது. மீராவோடையிலிருந்து மீன்பிடிப்பதற்காக மீனவர் ஒருவர் ஆழ்கடலுக்கு நேற்று முன்தினம் சென்றிருந்தார். அவருடைய வலை யிலேயே இந்த அரியவகை மீன் சிக்கியுள்ளது. மீனவரின் வீட்டில் வைக்கப்பட்ட அந்த மீனைப் பார்ப்பதற்கு, அப்பிரதேச மக்கள் குவிந்து வருகின்றனர்.(ஐ)

# கேரளக் கஞ்சாவுடன் ஒருவர் கைதாகினார்

மன்னார், மார்ச் 01

மன்னார் பிரதான வீதி ஓலைத்தொடுவாய் பகுதியில் 42 கிலோ 50 கிராம் கேரளக் கஞ்சாப் பொதிகளுடன் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

மன்னார் மாவட்ட ஊழல் ஒழிப்புப் பிரிவுப் பொலிஸார் மற்றும் கடற்படையினர் இணைந்து நேற்று இந்தச் சந்தேகநபரை கைது செய்துள்ளனர்.

இந்தப் பகுதியில் மேற்கொண்ட விசேட கண்காணிப்பு நடவடிக்கையின்போது அவர் கைது செய்யப்பட்டார்.

கைப்பற்றப்பட்ட கேரளக் கஞ்சா சுமார் 42 லட்சம் ரூபா பெறுமதியானது எனப் பொலிஸார் தெரிவித்தனர்.

மன்னார், புதுக்குடியிருப்பு பகுதியைச் சேர்ந்த 37 வயதுடைய நபர் ஒருவரே இவ்வாறு கைது செய்யப்பட்டார்.

இந்தச் சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை மன்னார் மாவட்ட ஊழல் ஒழிப்புப் பிரிவு பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (ஐ)

## இனி...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

செல்வாக்கை நிலைநிறுத்தத் தமிழ்க் கட்சி ஒன்று கங்கணம் கட்டி நிற்பதாகவும் தகவல்.

இனப்பிரச்சினைத் தீர்வு விவகாரம், பொறுப்புக்கூறல் போன்றவை தொடர்பில் இலங்கை அரசுத் தலைமையின் நிலைபாட்டில் ஏற்படக்கூடிய மாற்றங்களைக் கவனித்து அதற்கேற்ப ஜெனீவாவில் காய்களை நகர்த்தவும், அது தொடர்பில் தந்திரோபாயங்களை வகுக்கவும் சம்பந்தன் – சுமந்திரன் தலைமை தீர்மானித்திருப்பதாகத் தெரிகின்றது.

எது, எப்படி என்றாலும் இவ்விடயங்களைக் கையாள்வதற்காக சுமந்திரன் கடைசி நேரத்திலாவது ஜெனீவா செல்வது தவிர்க்க முடியாததாக இருக்கும் என்கின்றன விடயமறிந்த வட்டாரங்கள்.

இலங்கைத் தமிழரசுக் கட்சியின் தரப்பில் வழமை போல ஸ்ரீதரன் எம்.பியும் இம்முறை ஜெனீவா செல்வார்.

வழமையாக ஜெனீவா செல்லும் அனந்த சசிதரன் இம்முறை செல்வதற்கு வாய்ப்புகள் குறைவு. வடக்கு மாகாண சபை காலாவதியாகியமையை அடுத்து, இதுவரை அதன் உறுப்பினர் என்ற முறையில் அரச சேவையில் இருந்து விடுவிக்கபபட்டிருந்த அவர், இப்போது மீண்டும் அரச சேவையில் இணைந்து விட்டார்.

அரச சேவையில் இருந்தபடி வெளிநாடு செல்வதானால் அதற்கான முன் அனுமதியை நேரத்துடன் அவர் பெற்றிருக்க வேண்டும். இனி, குறுகிய காலத்தில் அதனை அவர் பெறுவது கஷ்டம் என்று கூறப்படுகின்றது.

இதேசமயம் –

வடக்கு மாகாண முன்னாள் முதலமைச்சர் சி.வீ.விக்னேஸ்வரனை ஜெனீவாவுக்கு வருமாறு பலதரப்புகளும் வெற்றிலை வைத்தன. ஆனால் எல்லோருக்கும் மறுப்பைக் கூறிய அவர் நேற்றுமுன்தினம் தமிழ்நாடு புறப்பட்டுச் சென்றுவிட்டார். அது அவரின் தனிப்பட்ட விஜயம் என்றும், அவர் பெரும்பாலும் 4 ஆம் திகதி திங்களன்று வரும் சிவராத்திரியை முடித்துக் கொண்டுதான் நாடுதிரும்புவார் என்றும் கூறப்படுகின்றது.

அதற்குப்பின்னரும் ஜெனீவா போகும் எண்ணம் அவருக்கு இல்லை. எனினும் தமது தமிழ் மக்கள் கூட்டணி மற்றும் தமிழ் மக்கள் பேரவை சார்பில் ஓரிருவரை ஜெனீவா அனுப்புவது குறித்து கொழும்பு திரும்பியதும் அவர் பரிசீலிக்கக்கூடும் என சில வட்டாரங்கள் தெரிவித்தன்.

ரெலோ பிரமுகர் சிவாஜிலிங்கமும் ஜெனீவா செல்வதற்குப் பயண மூடையைக் கட்டித் தயாராக இருக்கிறார் எனக் கூறப்பட்டது.

இப்பத்தியில் முன்னர் நான் சுட்டிக் காட்டியபடி, அவரையும், அவரது கட்சிச்செயலாளர் சிரேஷ்ட சட்டத்தரணி என். ஸ்ரீகாந்தாவையும் உள்ளடக்கிய ரெலோ கட்சிக் குழு கடந்த திங்களன்று புளொட் தலைவர் சித்தார்த்தனையும் அதன் பின்னர் தமிழரசுக் கட்சித் தலைவர் மாவை சேனாதிராசாவையும் சந்தித்துப் பேசியதாகத் தகவல்.

ஜெனீவாவில் இலங்கைக்கு கால அவகாசம் வழங்கப்படக் கூடாது என்பதை வலியுறுத்தி பொதுக்கோரிக்கை ஒன்றை முன்னாள் முதலமைச்சர் சி.வீ.விக்னேஸ்வரனையும் உள்ளடக்கி வெளியிடுவதற்கு ஆதரவு வழங்கும்படி ரெலோ குழு கோரியதாகத் தெரிகின்றது.

ரெலோவின் சார்பில் அதன் எம்.பிக்களான செல்வமும் கோடீஸ்வரனும் அத்தகைய கடிதத்தில் முதலில் ஒப்பமிடுவார்களாயின் தாங்களும் அதில் ஒப்பமிடுவது குறித்துப் பரிசீலிக்கலாம் எனச் சித்தார்த்தன் பதிலளித்தாராம்.

''*பேசுவோம் தம்பி!*'' என்று மழுப்பல் பதில் கூறி ரெலோ பிரதிநிதிகளை சடைந்து அனுப்பி வைத்தார் மாவையர் என்றும் கூறப்பட்டது.

எது, எப்படியோ, இந்த ஜெனீவா விவகாரத்தை முன்வைத்து –

இலங்கை அரசுக்குக் கால அவகாசம் வழங்கக்கூடாது என்ற கோரிக்கையைத் தானே முன்னின்று முன்னெடுப்பது போல காட்டி –

அதனடிப்படையில் வடக்கு, கிழக்கு எங்கும் ஒருநாள் முழு அடைப்பை முன்னெடுக்கவும் –

உணர்வுபூர்வமான இந்த விடயத்தை முன்னிறுத்தி வெற்றிகரமாக நடத்திக் காட்டுவதன் மூலம் தனது அரசியல் செல்வாக்கை நிலைநிறுத்திக் கொள்ளவும் – அதுவும் தேர்தல் சமயத்தில் தன் செல்வாக்குப் பலத்தை இப் படிக் காட்டிக் கொள்ளவும். – ரெலோ கணக்குப் போடு வதாகவும் தெரிகின்றது.

அப்படியானால், விரைவில் இன்னொரு நாள் வடக்கு, கிழக்கு மக்கள் கட்டாய முடக்கத்துக்குள் அடங்க வேண்டியிருக்கும் என்று தான் தோன்றுகின்றது.

- மின்னல் -

## அதிகார...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இந்த நால்வர் குழுவில் எம்.ஏ. சுமந்திரன், அமைச்சர் ராஜித சேனாரத்ன, சரத் அமுனுகம, டிலான் பெரேரா ஆகியோர் இடம் பெற்றுள்ளனர்.

அரசமைப்பு மாற்றம் குறித்து ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன நேற்றுக் கூட்டிய உயர்மட்டக் கூட்டம் முதலில் நேற்று மாலை 6 மணிக்கு நடைபெறும் எனத் தீர்மானிக்கப்பட்டிருந்தது. ஆனால் அது திடீரென ஒரு மணித்தியாலயம் முன் நகர்த்தப்பட்டது. நேற்று மாலை 5 மணி முதல் 6.30 மணி வரை அது நடைபெற்றது.

இந்தக் கூட்டத்தில் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க, அமைச்சர்கள் லக்ஷ்மன் கிரியெல்ல, மனோ கணேசன், ரவூப் ஹக்கீம், ரிஷாத் பதியுதீன், திகாம்பரம், ராஜித சேனாரத்ன மற்றும் சம்பந்தன், சுமந்திரன், சரத் அமுனுகம, நிமால் ஸ்ரீபால டி சில்வா, டிலான் பெரேரா ஆகியோர் பங்குபற்றினர். அமைச்சர்கள் சம்பிக்க ரணவக்க, மலிக் சமரவிக்கிரம ஆகியோர் பங்குபற்றுவர் என்று கூறப்பட்ட போதிலும் அவர்கள் கலந்துகொள்ளவில்லை.

புதிய அரசமைப்பு உருவாக்கம் குறித்து சம்பந்தன் கடந்த 20 ஆம் திகதி தம்மைச் சந்தித்து வலியுறுத்தியமை பற்றியும், அதையடுத்து அடுத்த நாள் தாம் நாடாளுமன்றத்தில் பிரதமர், சம்பந்தன் ஆகியோரைச் சந்தித்துக் கலந்துரையாடியமைக்கு அமைய இந்தக் கூட்டம் கூட்டப்பட்டிருக்கின்றது என்றும் விளக்கினார் மைத்திரி.

அடுத்து புதிய அரசமைப்பு உருவாக்கத்தின் அவசியத்தை சம்பந்தன் விவரித்தார். இலங்கை சர்வதேச சமூகத்துக்கு வழங்கிய உறுதிமொழி பற்றி எல்லாம் விளக்கிய அவர், புதிய அரசமைப்பு உருவாக்கம் இடம்பெறாவிட்டால் நேரக்கூடிய எதிர்விளைவுகளையும் சுட்டிக்காட்டினார்.

அடுத்து அரசமைப்பு உருவாக்கம் தொடர்பான விடயங்கள் ஆராயப்பட்டன.

குறிப்பாக, நிறைவேற்று அதிகார ஜனாதிபதி முறைமையை ஒழித்தல், தேர்தல் முறை மறுசீராக்கம் ஆகியவை போன்ற விடயங்கள் பேசப்பட்ட போது பெரும் வாக்குவாதங்களும், முரண்பாடுகளும் கருத்து பேதங்களும் மோசமான கட்டத்தை அடைந்தன.

எதிரும் புதிருமான கருத்துக்களால் கூட்டம் சூடு பிடித்தது.

அப்போது சுமந்திரன் எம்.பி. குறுக்கிட்டார்.

"நிறைவேற்று அதிகார ஜனாதிபதி முறைமை பற்றிய சர்ச்சையால் இந்த நாட்டில் யுத்தம் ஏற்பட வில்லை. அல்லது தேர்தல் முறையை மாற்றக் கோரி நாடு பிளவுபட முற்படவில்லை. அதிகாரப் பரவலாக்கலில் ஏற்பட்ட குறைபாடு காரணமாகவே இந்த நாட்டில் இனப்பிரச்சினை நீடித்து, யுத்தம் வெடித்தது. ஆகவே, அந்தப் பிரச்சினைக்குத் தீர்வு காண்பதே முக்கியமானது, பிரதானமானது.

"ஆனால் அதிகாரப் பரவலாக்கல் விடயத்தில் கட்சிகளுக்கு இடையில் ஏக இணக்கம் ஏற்பட்டுள்ளது. க்ருத்து முரண்பாடோ, எதிர்மறையான நிலைப்பாடுகளே இல்லாமல் எல்லாக் கட்சிகளும் ஐக்கியப்பட்ட நிலையிலேயே அதிகாரப் பரவலாக்கல் திட்டம் சம்பந்தமா– அரசமைப்பு யோசனை முன் வைக்கப்பட்டுள்ளது. குறைந்த பட்சம் அதையாவது அரசமைப்பு மாற்றமாகக் கொண்டு வரலாமே!" – என்றார் சுமந்திரன்.

அமைச்சர் ஹக்கீம், மனோ கணேசன் போன்றோரும் அதனை ஆதரித்துக் கருத்து வெளியிட்டனர்.

அப்படியானால், எந்தெந்த விடயங்களை அரசமைப்பில் மாற்றுவதற்கு ஓரளவு இணக்கம் காணப்பட்டுள்ளது என்பதை அடையாளம் கண்டு அவற்றைச் சமர்ப்பிப்பதற்காக நான்கு பேர் கொண்ட குழுவை நியமிப்பது எனத் தீர்மானிக்கப்பட்டது. அதையடுத்து நால்வர் குழு நியமிக்கப்பட்டது.

இக்குழு உடனடியாகக் கூடி இந்த விடயங்களை ஆராய்ந்து உரிய பரிந்துரைகளைச் சமர்ப்பிக்கும் என்றும் –

மீணடும் இந்த உயர்மட்டக் கூட்டத்தை அடுத்த வாரத்தில் கூட்டி அரசமைப்பு மாற்றத்துக்கு உட்படுத்த வேண்டிய விடயங்கள் குறித்து ஆராய்வது என்றும் –

நேற்றைய கூட்டத்தில் முடிவு செய்யப்பட்டது. (உ)

# கல்வி அமைச்சுக்கு முன்னால் ஆசிரியர் சங்கம் ஆர்ப்பாட்டம்!

## பொலிஸார் நீர்த்தாரைப் பிரயோகம்




கொழும்பு, மார்ச் 01

பத்தரமுல்ல - இசுருபாயவில் உள்ள கல்வி அமைச்சுக்கு முன்னால் மேற்கொள்ளப்பட்ட எதிர்ப்பு ஆர்ப்பாட்டத்தின் மீது நீர்த்தாரைப் பிரயோகம் மேற்கொள்ளப்பட்டது.

கல்வி அமைச்சுக்கு முன்னால் இலங்கை ஆசிரியர் சேவை ஒன்றியத்தினரால் எதிர்ப்பு ஆர்ப்பாட்டமொன்று நேற்று முன்னெடுக்கப்பட்டது.

கடந்த 22 வருடங்களாகத் தாம் எதிர்நோக்கி வரும் சம்பளப் பிரச்சினைக்குத் தீர்வு வழங்குதல், 30 மாதங்களாக நிலுவையிலுள்ள சம்பளத்தை வழங்குதல் உள்ளிட்ட கோரிக்கைகளை முன்வைத்தே இந்த ஆர்ப்பாட்டம் மேற்கொள்ளப்பட்டது.

இந்த ஆர்ப்பாட்டம் காரணமாக, பத்தரமுல்ல - பெலவத்த பிரதேசத்தில், கடும் போக்குவரத்து நெரிசல் ஏற்பட்டமை குறிப்பிடத்தக்கது. (ஐ)

# அம்பாந்தோட்டையில் அமெரிக்காவுக்கு கண்!

## தூதுவர் அங்கு திடீர்ப் பயணம்

கொழும்பு, மார்ச் 01

அமெரிக்கத் தூதுவர் அலெய்னா ரெப்லிட்ஸ் தலைமையிலான அமெரிக்க அதிகாரிகள் குழு, சீன நிறுவனத்தின் வசமுள்ள அம்பாந்தோட்டைத் துறைமுகத்துக்குச் சென்று பார்வையிட்டுள்ளது.

நேற்று முன் தினம் அம்பாந்தோட்டைத் துறைமுகப் பகுதிக்கு ஆய்வுப் பயணத்தை மேற்கொண்ட அமெரிக்கத் தூதுவர், அம்பாந்தோட்டை கடற்படைத் தளத்தின் கட்டளை அதிகாரி கொமடோர் அசோக விஜேசிறி வர்த்தனவைச் சந்தித்து பாதுகாப்பு ஒழுங்கமைப்புகள் குறித்து விசாரித்தார்.

இரு தரப்பு முக்கியத்துவம் வாய்ந்த பல்வேறு விவகாரங்கள் குறித்து இந்தச் சந்திப்பின்போது கலந்துரையாடப்பட்டுள்ளது.



இந்தக் கலந்துரையாடலில் அம்பாந்தோட்டைத் துறைமுகத்தின் பாதுகாப்புக்குப் பொறுப்பான தலைமை அதிகாரி ரியர் அட்மிரல் ஜெயந்த சில்வா, அமெரிக்கத் தூதரகப் பாதுகாப்பு ஆலோசகர் டக்ளஸ் ஹெரஸ் ஆகியோரும் கலந்து கொண்டனர். (ஐ)

# தென் மாகாணசபை உறுப்பினர் பாலியல் குற்றச்சாட்டில் கைது!

கொழும்பு, மார்ச் 01

தென் மாகாண சபை உறுப்பினர் கிரிசாந்த புஷ்பகுமார அக்மீமன பொலிஸாரால் கைது செய்யப்பட்டார்.

16 வயதுப் பாடசாலைச் சிறுமி ஒருவரைப் பாலியல் துஷ்பிரயோகம் செய்தார் என அவர் மீது குற்றம் சாட்டப்பட்டுள்ளது.

கடந்த 26ஆம் திகதி இந்தச் சம்பவம் இடம்பெற்றுள்ளதாக பொலிஸ் ஊடகப் பேச்சாளர் அலுவலகம் கூறியுள்ளது.

தென் மாகாண சபை உறுப்பினர் கிரிசாந்த புஷ்பகுமார ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பைச் சேர்ந்தவர் என்பது குறிப்பிடத்தக்கது. (ஐ)

# அலுகோசு பதவிக்கு 45 பேர் விண்ணப்பம்

கொழும்பு, மார்ச் 01

தூக்கிலிடுபவர் (அலுகோசு) பதவிக்காக 45 விண்ணப்பங்கள் கிடைத்துள்ளனஎன சிறைச்சாலைகள் அமைச்சு தெரிவித்துள்ளது.

விண்ணப்பப்படிவங்களைப் பரிசீலிக்கும் நடவடிக்கை நேற்று முதல் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக சிறைச்சாலைகள் அமைச்சின் உயரதிகாரி ஒருவர் குறிப்பிட்டார்.



இதன் பின்னர் நேர்முகப் பரீட்சை நடத்தி தூக்கிலிடுபவர் பதவிக்கானவெற்றிடம் நிரப்படும் எனவும் அவர் கூறினார்.

எவ்வாறாயினும், விண்ணப்பிப்பதற்கான கால அவகாசத்தை நீடிப்பதற்கு எவ்வித அவசியமும் இல்லை எனவும் சிறைச்சாலைகள் அமைச்சு குறிப்பிட்டுள்ளது.

மேலும் தூக்கிலிடுபவர் பதவிக்காக வெளிநாட்டுக் குடிமகன் ஒருவரை நியமிப்பது தொடர்பிலும் கவனம் செலுத்தப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதற்குத் தேவையான நடவடிக்கைகளும் தற்போது முன்னெடுக்கப்பட்டுள்ளன.

போதைப்பொருள் குற்றஞ்சாட்டில் தூக்குத் தண்டனை விதிக்கப்பட்டுள்ள கைதிகளின் பெயர்ப்பட்டியல் சிறைச்சாலைகள் அமைச்சினால் கடந்த ஜனவரி 25ஆம் திகதி ஜனாதிபதி செயலகத்திற்கு அனுப்பிவைக்கப்பட்டது.

சட்டமா அதிபரின் பரிந்துரைக்கு அமைய பட்டியல் அனுப்பிவைக்கப்பட்டுள்ளது.

இந்தப் பட்டியலில் 17 கைதிகளின் பெயர்விபரங்கள் உள்ளடக்கப்பட்டுள்ளன.

இதேவேளை, 1976 ஆம் ஆண்டே இலங்கையில் இறுதியாக தூக்குத் தண்டனை நிறைவேற்றப்பட்டது. வெலிக்கடைச் சிறைச்சாலையில், சந்திரதாசஎன்பவரே தூக்கிலிடப்பட்டார் என்பது குறிப்பிடத்தக்கது. (ஐ)

# பிரபல மகளிர் ஆரம்பப் பாடசாலையின் அதிபரின் மோசடிக்கு அதிகாரிகள் துணை

## ஆளுநருக்கு ஆசிரியர் சங்கம் கடிதம்

யாழ்ப்பாணம், மார்ச் 01

யாழ்ப்பாணத்தின் பிரபல கல்லூரிகளில் ஒன்றான மகளிர் ஆரம்பப் பாடசாலை அதிபர் மிகப் பெரும் நிதி மோசடி உள்ளிட்ட பல்வேறு முறைகேடுகளில் ஈடுபட்டுள்ளார் என்று இலங்கை ஆசிரியர் சங்கம் குற்றஞ்சாட்டியுள்ளது.

இது தொடர்பாக இலங்கை ஆசிரியர் சங்கத்தின் உபதலைவர் தீபன் திலீசன், வடக்கு மாகாண ஆளுநருக்குக் கடிதம் ஒன்றை அனுப்பிவைத்துள்ளார்.

வடக்கு மாகாணக் கல்வி அதிகாரிகளின் முறைகேடுகளுக்கு துணைபோகும் செயற்பாடு தொடர்பானது எனக் குறிப்பிட்டு வடக்கு மாகாண ஆளுநருக்கு எழுதியுள்ள அக்கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளவை வருமாறு:

யாழ்ப்பாணத்தில் மேற்படி ஆரம்பப் பாடசாலையின் தற்போதைய அதிபர் பல்வேறு நிதி மோசடிகளில் ஈடுபட்ட நிலையில் அந்தப் பாடசாலையின் உதவி அதிபராகச் செயற்பட்டுவருபவர் அத்தகைய மோசடி நடவடிக்கைகளுக்கு எதிர்ப்பு தெரிவித்து வந்துள்ளார்.

அந்த உதவி அதிபர் தொடர்பாக அதிபரால் 'தனது செயற்பாடுகளுக்கு உதவி அதிபரால் ஒத்துழைப்பு வழங்கப்படுவதில்லை' என்று கூறி யாழ்ப்பாணம் வலயக் கல்விப் பணிமனைக்கு முறைப்பாடு செய்யப்பட்டிருந்தது.

அதனடிப்படையில் உதவி அதிபரிடம் வலயக் கல்விப்பணிப்பாளர் விளக்கம் கோரப்பட்டு அவரால் குற்றச்சாட்டுகளுக்கு விளக்கமளிக்கப்பட்டது. அத்துடன், பாடசாலை அதிபரின் நிதி மோசடி உள்பட19 விதமான முறைகேடுகள் தொடர்பாக ஆதாரங்களைச் சமர்ப்பித்து வலயக் கல்விப் பணிமனையினருக்கு உதவி அதிபர் முறைப்பாடும் செய்திருந்தார். இவற்றுக்கு துணைபோகாததாலேயே தன்மேல் அதிபரால் குற்றம் சுமத்தப்பட்டதாகவும் அவர் குறிப்பிட்டிருந்தார்.

இந்த முறைப்பாடுகளில் பின்வருவன மிகப் பெரும் நிதி மோசடி நடைபெற்றுள்ளமைக்கான சில சான்றுகளாகும்.

1. 2018ஆம் ஆண்டு தரம் 1 மாணவர்களிடம் 15,000/= ரூபா அதிபர் பெற்றிருந்த நிலையில் சிலருக்கு மட்டுமே பற்றுச்சீட்டு வழங்கப்பட்டுள்ளதாகவும் - பற்றுச்சீட்டு வழங்கப்படாத பெற்றோரை தன்னால் இணங்காட்ட முடியும் எனக் குறிப்பிட்டுள்ளார்.

2. 2017ஆம் ஆண்டு தரம்- 5 புலமைப் பரிசில் பரீட்சையில் சித்தியடைந்த மாணவர்கள் இறுதிக் கௌரவிப்பின்போது ஒரு இலட்சம் ரூபா சேர்த்து அதிபரிடம் வழங்கியுள்ளார்கள். இப்பணம் இன்றுவரை பாடசாலை கணக்கில் வைப்பிலிடப்படவில்லை

3. ஒருவரால் பாடசாலைக்கென வழங்கப்பட்டலப்ரொப் கணினி மற்றும் புரஜெக்டர் என்பன பொருள் பதிவேட்டில் பதியப்படவுமில்லை. பற்றுச்சீட்டும் வழங்கப்படவில்லை.

4. 2018ஆம் ஆண்டு நடன விழாவில் பங்குபற்றிய மாணவர்களுக்கு வழங்கப்பட்ட 25,000 ரூபா பெறுமதியான காசோலை வைப்பிலிடப்படவில்லை.

இவ்வாறான மோசடியில் ஈடுபட்ட அதிபரை அந்தப் பாடசாலையிலேயே தொடர்ந்தும் கடமையாற்ற அனுமதித்து உதவி அதிபரை ஆரம்பக்கட்ட விசாரணைக்காக இடமாற்றம் செய்யும் செயற்பாடு வடமாகாண கல்விப் பணிப்பாளரால் முன்னெடுக்கப்பட்டுள்ளது.

உதவி அதிபரை மட்டும் இடமாற்றுவதன் மூலம் சாட்சியங்களையும், தடயங்களையும் அழிக்கக்கூடிய உதவியைப்புரிவதற்காகவே வடக்கு மாகாணக் கல்வி அதிகாரிகளால் இந்தச் செயற்பாடு முன்னெடுக்கப்பட்டுள்ளதோ என நாம் சந்தேகிக்கின்றோம்.

இவ்விசாரணையின் பொருட்டுச் சாட்சியங்கள் மறைக்கப்படாமலும், அச்சுறுத்தப்படாமலும் காணப்படும் பொருட்டு அந்தப் பாடசாலையின் அதிபரும் ஒரே நேரத்தில் இடமாற்றப்பட்டு கணக்காய்வு மேற்கொள்ளப்படவேண்டும்.

வலயக் கல்வி அதிகாரி ஒருவர், அதிபருக்கு எதிராகச் சாட்சி வழங்கத் தயாராயிருக்கும் அன்பளிப்பாளர் ஒருவரை அழைத்து, அதிபரின் முறைகேட்டைப் பெரிதுபடுத்தவேண்டாம் என கேட்டுள்ளன எனவும் அறிய முடிகின்றது.

இவ்விதமான வடக்கு மாகாணக் கல்வி அதிகாரிகளின் முறைகேட்டாளர்களுக்குச் சாதகமாக செயற்படும்போக்கு மிகப்பெரிய முறைகேடாகும்.

இந்த முறைகேடுகள் தொடர்பாக நீதியான விசாரணையை இலங்கை ஆசிரியர் சங்கம் வலியுறுத்துகின்றது. என அந்தக் கடிதத்தில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஐ)

## நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: 30, கல்லூரி வீதி, யாழ்ப்பாணம்
தொலைபேசி - 021 222 3000,
மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
இணையம் - https://kalaikathir.online

## புதிய அரசமைப்பு வராவிடினும் அரசமைப்புத் திருத்தம் வரலாம்

புதிய அரசமைப்பு உருவாக்க முயற்சிகள் அடியோடு படுத்து விட்டன என்றுதான் நாம் எல்லோரும் கருதியிருந்தோம்.

ஆனால், அப்படியல்ல, அதற்கு இன்னமும் வாய்ப்பு இருப்பதாகத் தாம் கருதுகிறார் என்று தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பேச்சாளர் எம்.ஏ.சுமந்திரன் எம்.பி. திரும்பத் திரும்பக் கூறி வந்தார்.

மீண்டும், அரசமைப்பு மாற்றம் குறித்துப் பேசுவதற்காக நேற்று மாலை ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தலைமையில் உயர்மட்டக் கூட்டம் அழைக்கப்பட்டிருந்தமை, சுமந்திரனின் கருத்தை உறுதிப்படுத்துவதாக வந்து அமைந்திருக்கின்றது.

நாட்டை உலுப்பி வரும் தேசிய இனப் பிரச்சினைக்கு நியாயமான தீர்வு ஒன்றை உள்ளடக்கிய புதிய அரசமைப்பை உருவாக்குவதற்காக முழு நாடாளுமன்றமுமே அரசமைப்புப் பேரவையாக மாறியமையும் -

புதிய அரசமைப்பு நகலை உருவாக்குவதற்காக பிரதமர் தலைமையில் இருபது உறுப்பினர்களைக் கொண்ட அரசமைப்பு வழிகாட்டல் குழு, உப குழுக்கள், உதவிக்கு நிபுணர் குழுக்கள் என்று பல கட்டமைப்புகள் அமைக்கப்பட்டமையும் -

இந்த அரசமைப்புப் பேரவையும், வழிகாட்டல் குழுவும், உப குழுக்களும் பல அமர்வுகளை நடத்தியதன் பெறுபேறாக, புதிய அரசமைப்புக்கான நகல் ஒன்றை ஏற்படுத்துவதற்குரிய மாதிரி வடிவம் தயாரானமையும் - தெரிந்த விடயங்கள்தாம்.

2015 ஒகஸ்டில் புதிய அரசு பொறுப்பேற்ற பின்னர் கடந்த மூன்றரை ஆண்டு காலத்தில் கட்டவிழ்ந்த விடயங்கள் இவை.

ஆனால், புதிய அரசமைப்பு உருவாக்கல் உட்பட பல விடயங்களுக்கு மக்களிடம் வாக்குறுதி அளித்து, ஆணை பெற்று ஆட்சி அதிகாரத்துக்கு வந்த ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன, தமது அரசியல் நிலைப்பாட்டை மாற்றிக் கொண்டு, மீண்டும் மஹிந்த ராஜபக்ஷவுடன் அணி சேர்ந்து, பின் கதவால் அவரைப் பிரதமராக்கி, புதிய அரசு ஒன்றை ஸ்தாபிக்க எடுத்த முயற்சிகள், புதிய அரசமைப்பு உருவாக்க முயற்சிகளுக்கு ஆப்பு வைத்தன.

அத்தோடு புதிய அரசமைப்பு உருவாக்க முயற்சிகள் அடியோடு தகர்ந்துவிட்டன என்றே பலரும் கருதினோம். நம்பினோம்.

ஆனால், தென்னிலங்கையில் ஸ்திரமற்ற அரசுகள் இருந்த போதுதான் ஆக்கபூர்வமான அரசமைப்புத் திருத்தங்கள் வந்தன என்பதை 17 ஆவது மற்றும் 19 ஆவது திருத்தங்களை முன்னுதாரணமாகக் காட்டிக் குறிப்பிட்ட சுமந்திரன், இப்போதுள்ள பலவீனமான அரசும் கூட இத்தகைய நிலைமைக்குச் சாத்தியமானதுதான் என்றும் சுட்டிக் காட்டியிருந்தார்.

ஆனால், அவர் உதாரணம் காட்டிய இரண்டுமே, அரசமைப்புத் திருத்தங்கள்தாம். புதிய அரசமைப்பு உருவாக்கங்கள் அல்ல.

இப்போதைய சூழலிலும் அரசமைப்பு மாற்றம் பற்றியே பிரஸ்தாபிக்கப்படுவதாக அறிகிறோம்.

அது புதிய அரசமைப்பு உருவாக்கமா அல்லது தற்போதுள்ள அரசமைப்பில் ஏதேனும் மாற்றமா அல்லது சீர்திருத்தமா என்பதுதான் கேள்வி.

இப்போதுள்ள அரசியல் சூழலில் - அதுவும், தென்னிலங்கை அரசியலில் பிரதான கட்சிகள் மற்றும் தரப்புகள் தமக்குள் கன்னை பிரிந்து முரண்பட்டு நிறகின்றமையை நோக்கின்றபோது புதிய அரசமைப்பு உருவாக்க முயற்சி என்பது அசாத்தியமானது என்றே தோன்றுகின்றது.

பெரும்பாலும், தமிழரின் அபிலாஷைகளை நோக்கிய திசை யில் ஏதேனும் ஆக்கபூர்வமான அரசமைப்பத் திருத்தங்கள், மாற்றங்களுக்கு இன்னும் கூட வாய்ப்பு இருப்பதாகவே தோன்றுகின்றது.

நிறைவேற்று அதிகார ஜனாதிபதி ஆட்சி முறையை மட்டுப்படுத்தல், மாகாணங்களுக்கு கூடுதல் அதிகாரம் அளித்தல், மாகாணங்களுக்கு வழங்கப்பட்ட அதிகாரங்களை மத்திய அரசு மீளப் பெறமுடியாத உரித்தை உறுதிப்படுத்தல், ஆளுநர்கள் மூலம் மாகாணங்களின் சுயாதீனச் செயற்பாடுகளை கட்டுப்படுத்தும் போக்கை மாற்றுதல் போன்ற முக்கிய திருத்தங்கள் அரசமைப்புக்கு வருவதற்கு இன்னும் வாய்ப்புகள் உள.

சுமந்திரன் சுட்டிகாட்டுகின்றமை போல ஸ்திரமற்ற அரசுகள் ஆட்சியில் இருக்கும்போது வரக்கூடியது புதிய அரசமைப்பு அல்ல, அரசமைப்புத் திருத்தங்கள், மாற்றங்கள் மட்டுமே.

அத்தகைய ஒரு மாற்றத்தை அல்லது திருத்தத்தை தமிழருக்குச் சாதகமாய் பயன்படுத்த வாய்ப்பு இருக்குமாயின் அதற்காக முயற்சிப்பதும் பொருத்தமானதுதான்.

தமிழர்களைப் பொறுத்தவரை இன்றைய அரசியல் வக்கற்ற நிலையில் அத்தகைய ஒரு முயற்சியில் தந்திரோபாயமாக ஈடுபடுவதும் கூட ஒரு நல்ல இராஜதந்திரம் தான்.

## வேலணை பிரதேச அபிவிருத்தி குறித்து டக்ளஸ் தேவானந்தா நேரில் ஆராய்வு!



யாழ்ப்பாணம், மார்ச் 01

தீர்வுகாணப்பட முடியாதிருக்கின்ற எமது மக்களின் பிரச்சினைகளுக்கு உரிய வகையில் தீர்வு காணும் வகையில் நாம் பல செயற்திட்டங்களை முன்னெடுக்க தீர்மானித்துள்ளபோதிலும் எமக்கு போதியளவு அரசியல் பலம் இல்லாத நிலையில் அவற்றை சாத்தியமாக்குவதிலும் செயற்படுத்துவதிலும் காலதாமதம் ஏற்பட்டுள்ளது. இந்நிலையை கருத்திற்கொண்டு எதிர்காலங்களில் மக்கள் எமக்கு முழுமையான அரசியல் பலத்தை தருவார்களேயானால் மக்கள் எதிர்கொள்ளும் ஒவ்வொரு பிரச்சினைகளுக்கும் எம்மால் உரிய முறையில் தீர்வு காண முடியும் என ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சியின் செயலாளர் நாயகமும் நாடாளுமன்ற உறுப்பினருமான டக்ளஸ் தேவானந்தா தெரிவித்துள்ளார்.

வேலணைப் பிரதேச உள்ளூராட்சி மன்ற உறுப்பினர்கள் மற்றும் ஆலோசனைச் சபை உறுப்பினர்களுடன் நேற்று இடம்பெற்ற சந்திப்பின் போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் -

தீவக மண்ணுக்கும் அங்கு வாழ்கின்ற மக்களுக்கும் எமக்கும் நீண்டகாலநட்பும்தொடர்புகளும் இற்றைவரையில் தொடர்ந்தே வருகின்றது. தீவக மக்கள் எதிர்கொண்டு வரும் ஒவ்வொரு பிரச்சினைகளுக்கும் நெருக்கடிகளுக்கும் உரியதான தீர்வுகளை பெற்றுக்கொடுக்க வேண்டும் என்பதில் தாம் மிகுந்த அக்கறையுடன் மட்டுமல்லாது அர்ப்பணிப்புடனும் உழைத்து வருகின்றோம். ஆரம்ப காலங்களில் குறிப்பாக 90களிலிருந்து தீவக மக்களின் வாழ்வியல் மாற்றத்திற்காக நாம் தொடர்ச்சியாக உழைத்துக்கொண்டுதான் இருக்கின்றோம். கடந்த காலங்களில் நெடுந்தீவு, வேலணை, ஊர்காவற்றுறை ஆகிய பிரதேச சபைகளை மக்கள் எம்மிடம் பொறுப்பு தந்திருந்த போது அக்காலகட்டங்களில் மக்களால் முன்வைக்கப்பட்ட பல்வேறு கோரிக்கைகளை முன்னுரிமை அடிப்படையில் தீர்வு கண்டு இருக்கின்றோம். ஆனாலும் தற்போதும் கூட தீவக மக்கள் எம் கட்சி மீது வைத்துள்ள நம்பிக்கைக்கு பாத்திரமாக நாம் நிச்சயம் செயற்பட்டுக்கொண்டிருக்கின்றோம்.

அந்த வகையில் தீவக மக்களின் எதிர்பார்ப்பு ஒருபோதும் வீணாகமாட்டாது. குறிப்பாக தீவக மக்கள் காலத்திற்கு காலம் குடிதண்ணீர்ப் பிரச்சினையை எதிர்கொண்டு வரும் நிலையில் அதற்கு சரியானதொரு நிரந்தர தீர்வை பெற்றுக்கொடுக்க வேண்டும் என்பதில் நாம் மிகவும் கவனமாக இருக்கின்றோம். அதன் பிரகாரம்தான் முன்னைய காலங்களில் யாழ்ப்பாணம் இரணைமடுக் குடிதண்ணீர்த் திட்டத்தை நாம் வரவேற்று அதனை செயற்படுத்த வேண்டும் என்ற கோரிக்கையை வலியுறுத்தி அதற்காக எமது முழு ஆதரவையும் ஒத்துழைப்புக்களையும் வழங்கியிருந்தோம். இப்போதும் தீவகம் உள்ளிட்ட குடாநாட்டு மக்களின் குடிதண்ணீர்ப் பிரச்சினைக்கு யாழ்ப்பாணம் இரணைமடு குடிதண்ணீர்த்திட்டம்தான் சாத்தியமானது என வலியுறுத்தியும் வருகின்றோம்.

வேலணை பிரதேசத்தில் கடந்த காலங்களில் நாம் எமது கட்சியினூடாக பல்வேறுபட்ட மக்கள் நலன்சார்ந்ததும் இன்னும் பல்வேறு விதமானதுமான செயற்திட்டங்களையும் வேலைத் திட்டங்களையும் முன்னெடுத்துள்ளோம். அதேபோன்று எதிர்காலங்களிலும் இவ்வாறே முன்னெடுக்கவும் நாம் திட்டமிட்டுள்ளோம். இவற்றைவிட பாரியதான அபிவிருத்தி மற்றும் மக்கள் நலன்சார்ந்த விடயங்களை முன்னெடுப்பதற்கு எமக்கு அதிகளவான அரசியல் பலத்தை எமது மக்கள் ஒன்றிணைந்து தருவார்களேயானால் தீவகம் மட்டுமல்லாது யாழ்ப்பாணம் உள்ளடங்கலான வடக்கு மாகாணத்தை மட்டுமன்றி கிழக்கு மாகாணத்திலும் நாம் எமது மக்களுக்கான வாழ்வியலில் புரட்சிகரமான மாற்றங்களை ஏற்படுத்துவோம் - என்றார்.

(ஐ)

## மிகுந்த பொறுப்புடன் பேசவேண்டும் ஐ.தே.கவினருக்கு ரணில் கடிவாளம்!

கொழும்பு, மார்ச் 01

அமைச்சர்கள், இராஜாங்க, பிரதியமைச்சர்கள், நாடாளுமன்ற உறுப்பினர்கள் கருத்துக்களைக் கூறும்போது பொறுப்புடன் இருக்க வேண்டும் என்று பிரதமர் ரணில் விக்கிரமசிங்க அறிவுறுத்தியுள்ளார்.

கட்சியின் தலைமையகத்தில் நேற்று முன் தினம் இடம்பெற்ற கட்சியின் செயற்குழுக் கூட்டத்தின்போதே, அவர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

அமைச்சர்கள், நாடாளுமன்ற உறுப்பினர்கள், கொக்கெயின் பயன்படுத்துகின்றனர் என நெடுஞ்சாலைகள் மற்றும் வீதி அபிவிருத்தி இராஜாங்க அமைச்சர் ரஞ்சன் ராமநாயக்க தெரிவித்திருந்த கருத்துகள் தொடர்பில் கட்சியின் செயற்குழுக் கூட்டத்தில் கூடுதல் கவனம் செலுத்தப்பட்டது.

ஏனைய கட்சிகளைச் சேர்ந்த உறுப்பினர்கள் தொடர்பில் செயற்படுவதற்கு தனக்கு அதிகாரமில்லையெனத் தெரிவித்த பிரதமர் ரணில் விக்கிரமசிங்க, தேவையேற்படின் இரகசியப் பொலிஸாரின் அறிக்கையை அடிப்படையாகக் கொண்டு அரசு என்ற வகையில் செயற்பட முடியுமெனத் தெரிவித்துள்ளார்.

செயற்குழுவில் மிகவும் உணர்ச்சி வசப்பட்டு கருத்துரைத்த இராஜாங்க அமைச்சர் ரஞ்சன் ராமநாயக்க, 7 இலட்சம் விருப்பத்தைக் கொண்டிருப்போர் தன்னுடைய பேஸ்புக்கில் உள்ளனர் என்றும், ஆகையால் தான் தெரிவித்திருக்கும் கருத்துகள் தொடர்பில், பிரபல்யமான அரசியல்வாதி என்ற வகையில் கவனஞ் செலுத்துமாறும் கேட்டுக்கொண்டார் .

பிரதமர் மட்டுமன்றி, ஏனைய சிரேஷ்ட உறுப்பினர்களும், கருத்துகளைக் கூறும்போது, பொறுப்புடன் கூறுவது தொடர்பிலான கருத்துகளை முன்வைத்தனர் .

இந்நிலையில், உணர்ச்சிவசப்பட்டு கருத்துரைத்த இராஜாங்க அமைச்சர் ரஞ்சன் ராமநாயக்க, செயற்குழுக் கூட்டத்திலிருந்து உடனடியாக வெளியேறுவதற்கு முயற்சித்தாரெனத் தகவல்கள் தெரிவித்தன. (ஐ)

## அட்மிரல் வசந்த கரன்னகொட வழக்கிலிருந்து நீதிபதி விலகல்

கொழும்பில் 11 இளைஞர்கள் கடத்தப்பட்டுக்காணாமலாக்கப்பட்ட சம்பவம் தொடர்பான விசாரணைக்காக கைதுசெய்வதற்கு எதிரான உத்தரவு பிறப்பிக் குமாறு கோரி கடற்படையின் முன்னாள் தளபதி அட்மிரல் வசந்த கரன்னாகொடவினால் தாக்கல் செய்யப்பட்டிருந்த அடிப்படை உரிமை மீறல் மனுவை எதிர்வரும் 7 ஆம் திகதி பரிசீலிப்ப தாக உயர் நீதிமன்றம் நேற்று அறிவித்தது.

பிரதம நீதியரசர் நளின் பெரேரா, நீதியரசர்களாக பிரியந்த ஜயவர்தன மற்றும் முர்து பெர்னாண்டோ ஆகியோர் முன்னிலையில் இந்த மனு நேற்றுப் பரிசீலனைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது.

இதன்போது, தனிப்பட்ட காரணத்துக்காக இந்த வழக்கில் தன்னால் கலந்துகொள்ள முடியாதென நீதியரசர் பிரியந்த ஜயவர்தன அறிவித்தார். இதனைத் தொடர்ந்தே இந்த மனு மீதான பரிசீலனை மார்ச் மாதம் 7 ஆம் திகதிக்கு ஒத்திவைக்கப்பட்டது.

### நாளை

02.03.2019
சனிக்கிழமை
நட்சத்திரம்: பூராடம் மு.ப 8.53 வரை
திதி : ஏகாதசி பி.ப 2.08 வரை
சுபநேரம் : 3.27 - 4.57 வரை
இராகுகாலம் : 9.27 - 10.57 வரை

# ரஷ்யப் பாதுகாப்பு அதிகாரிகள் கொழும்பில் உயர்மட்டப் பேச்சு



ரஷ்யாவின் உயர்மட்டப் பாதுகாப்பு அதிகாரிகள் குழுவொன்று இலங்கைக்குப் பயணம் மேற்கொண்டு பாதுகாப்பு உயர் மட்டங்களுடன் பேச்சுக்களை நடத்தி வருகிறது.

இந்தக் குழுவில், ரஷ்யப் பாதுகாப்பு அமைச்சின் அதிகாரிகளான மேஜர் ஜெனரல் அலெக்சாண்டர்சின்சென்கோ, கேணல் சேர்ஜி உர்சென்கோ, லெப். கேணல் றோமன் போப்ரஸ், விக்டர் பெட்ரோவ், றோமன் செபுர்னொவ் ஆகியோர் இடம்பெற்றுள்ளனர்.

இவர்களுடன் ரஷ்யத் தூதுவர் யூரி பொறிசோவிச் மற்றும் ரஷ்யத் தூதரகத்தின் பாதுகாப்பு ஆலோசகர் ஆகியோரும் இலங்கை அரச உயர்மட்டங்களுடனான பேச்சுக்களில் கலந்து கொண்டுள்ளனர்.

இவர்கள் நேற்றுமுன்தினம் பாதுகாப்புச் செயலர் ஹேமசிறி பெர்னாண்டோவைச் சந்தித்துப் பேச்சு நடத்தியிருந்தனர்.

அதன்பின்னர், இலங்கை இராணுவத் தலைமையகத்துக்குச் சென்றிருந்த ரஷ்ய குழுவினர் இராணுவத் தளபதியைச் சந்தித்துப் பேச்சு நடத்தினர்.

இதன்போது, இலங்கைப் படையினரிடம் உள்ள ரஷ்ய தயாரிப்பு ஆயுத தளபாடங்களைப் பழுது பார்த்தல் மற்றும் புதுப்பித்துக் கொடுப்பதற்கான தொழில்நுட்ப உதவிகளை வழங்க இந்தக் குழு முன்வந்துள்ளது.

குறிப்பாக, இலங்கையின் கவசப் படைப்பிரிவு மற்றும் இயந்திர காலாட் படைப்பிரிவு, மின்னியல் மற்றும் இயந்திரப் பொறியியல் படைப்பிரிவுகளில் உள்ள கவசவாகனங்கள் மற்றும் கனரக வாகனங்களைப் பழுது பார்த்தல் மற்றும் புதுப்பித்துக் கொடுப்பது குறித்து இந்தப் பேச்சுக்களில் கவனம் செலுத்தப்பட்டுள்ளது.

அத்துடன், ரஷ்யாவில் நடக்கின்ற பயிற்சிகளில் இலங்கைப் படையினர் பங்கேற்கவும் இந்தக் குழுவினர் அழைப்பு விடுத்துள்ளனர்.

இந்தப் பேச்சுக்களின்போது, விடுதலைப் புலிகளுக்கு எதிரான போரை முடிவுக்குக் கொண்டுவர ரஷ்யா அளித்த பங்களிப்புக்கு இலங்கை இராணுவத் தளபதி நன்றி தெரிவித்துள்ளார். (ஐ)

# சாவகச்சேரி நகர சபைப் பிரிவில் தராசுகளுக்கு சீல் வைக்கும் பணி

யாழ்ப்பாணம், மார்ச் 01

நிறுவைகள், அளவைகள் கருவிகளுக்கான (தராசுகள்) முத்திரையிடுகின்ற பணிகள் சாவகச்சேரி நகராட்சி மன்றப் பிரிவில் அடுத்த வாரம் முன்னெடுக்கப் படவுள்ளன என அறிவிக்கப்பட்டுள்ளது.

மார்ச் மாதம் 5ஆம் திகதி முதல் 8ஆம் திகதி வரை காலை 9 மணிமுதல் பிற்பகல் 3 மணிவரை சாவகச்சேரி நகராட்சி மன்றத்தில் இந்தப் பணிகள் மேற்கொள்ளப்படும் என நகராட்சி மன்றச் செயலாளர் தெரிவித்தார்.

யாழ்ப்பாண மாவட்ட செயலக அளவீட்டு அலகுகள், நியமங்கள் சேவைகள் திணைக்களத்தினால் அவை பரிசோதித்து முத்திரையிடப்படவுள்ளன.

# அரசியல் எதிரிகள் ஒரே வரிசையில் !



கொழும்பு, மார்ச் 01

இலங்கையின் எதிரும் புதிருமான அரசியல் தலைவர்கள் நேற்றுமுன் தினம் கொழும்பில் நடந்த நிகழ்வு ஒன்றில் ஒன்றாகப் பங்கேற்றிருந்தனர்.

அமைச்சர் ஜோன் அமரதுங்க நாடாளுமன்றத்தில் 40 ஆண்டுகளை நிறைவு செய்துள்ளதை முன்னிட்டு கொழும்பு பண்டாரநாயக்க ஞாபகார்த்த சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் நேற்றுமுன்தினம் மாலை நிகழ்வு ஒன்று இடம்பெற்றது.

இந்த நிகழ்வில், ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன, பிரதமர் ரணில் விக்கிரமசிங்க, முன்னாள் ஜனாதிபதிகளான சந்திரிகா குமாரதுங்க, மஹிந்த ராஜபக்ஷ ஆகியோர் பங்கேற்றனர்.

மைத்திரிபால சிறிசேனவும் சந்திரிகாவும் அண்மைக் காலமாகச் சந்தித்துக் கொள்வதைத் தவிர்த்து வருகின்றனர். அதுபோன்றே மஹிந்த ராஜபக்ஷவைச் சந்திரிகா கடுமையாக விமர்சித்து வருகின்றனர்.

இவர்கள் அனைவரும் ஒரே வரிசையில் இந்த நிகழ்வில் அமர்ந்திருந்தனர்.

இந்த நிகழ்வில் முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா எதிர்க்கட்சித் தலைவர் மஹிந்தவுடன் மனம்விட்டு பேசினாராம். சுமார் பத்து வருடங்களுக்குப் பின்னர் சந்திரிகா மஹிந்தவுடன் இப்படிப் பேசியுள்ளார்.

இந்த நிகழ்வில் உரையாற்றிய ஜனாதிபதி, 2015 ஜனாதிபதித் தேர்தலில் ஜோன் அமரதுங்கவின் பங்களிப்பைத் தன்னால் மறக்க முடியாது என்று கூறினார்.

அத்துடன், மக்களால் ஏற்றுக் கொள்ளப்பட்டுள்ளவர் என்பதால் தான், அவரால் நீண்ட காலம் அரசியலில் நிலைத்திருக்க முடிகிறது என்றும் அவர் தெரிவித்தார். (ஐ)

# யாழ். முஸ்லிம் சனசமூக நிலையம் இன்று திறப்பு

யாழ்ப்பாணம், மார்ச் 01

யாழ்ப்பாணம், முஸ்லிம் கல்லூரி வீதியில் யாழ். முஸ்லிம் சனசமூக நிலையம், இன்று வெள்ளிக்கிழமை பிற்பகல் 2 மணிக்கு திறந்து வைக்கப்படுகின்றது என்று அதன் நிர்வாகிகள் அறிவித்துள்ளார். (இ)

# ஆரம்ப கற்றல் வள நிலையம் திறப்பு

யா/பெரியபுலம் மகா வித்தியாலயத்தில் "அண்மையில் உள்ள பாடசாலை சிறந்த பாடசாலை" தேசிய வேலைத்திட்டத்தின் கீழ் கல்வி அமைச்சினால் நிர்மாணிக்கப்பட்ட ஆரம்ப கற்றல் வளநிலையம் இன்று வெள்ளிக்கிழமை காலை 8.30 மணிக்கு திறந்து வைக்கப்படும்.

இதில் பிரதம விருந்தினராக வடக்கு ஆளுநர் கலாநிதி. சுரேன் ராகவன் கலந்து கொள்வார். (இ)

# 'கலாதரம்' வெளியீடு; ஆக்கங்கள் கோரல்

சண்டிலிப்பாய், மார்ச் 01

வலி தென்மேற்கு சண்டிலிப்பாய் பிரதேச செயலக கலாசாரப் பிரிவினால் 2019 ஆண்டு "கலாதரம்" எனும் பிரதேசமலர் வெளியீடு செய்யப்படவுள்ளமையால், எமது பிரதேச செயலக பிரிவுக்குட்பட்டு பிரதேசம் சார்ந்த விடயங்கள் மற்றும் கலை பண்பாட்டம்சங்களுடன் தொடர்புடைய விடயங்கள் உள்ளடக்கிய ஆக்கங்களை எதிர்வரும் 31 ஆம் திகதி முன்னர் கலாசார உத்தியோகத்தர் பிரதேச செயலகம், வலி தென்மேற்கு எனும்முகவரிக்கு அனுப்பிவைக்குமாறு பிரதேச செயலாளர் திருமதி. யு. யசோதா கேட்டுக் கொண்டுள்ளார். (இ)

# நிதிக்குற்றப் புலனாய்வுப் பிரிவு அதிகாரிகள் மீதும் விசாரணை!

## ஆரம்பித்துள்ளது சி.ஐ.டி.

கொழும்பு, மார்ச் 01

நிதிக் குற்றப் புலனாய்வுப் பிரிவின் தலைவராக இருந்த மூத்த பிரதிப் பொலிஸ் மா அதிபர் ரவி வைத்யாலங்கார உள்ளிட்ட மூத்த அதிகாரிகள் சிலருக்கு எதிராக குற்றப் புலனாய்வுப் பிரிவு விசாரணைகளை ஆரம்பித்துள்ளது.

நிதிக் குற்றப் புலனாய்வுப் பிரிவின் உயர் அதிகாரிகள் சிலர், சந்தேக நபர்களுக்கு இரகசியங்களை வெளியிட்டனர் என்ற குற்றச்சாட்டின் பேரிலேயே இந்த விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

அத்துடன் நிதிக் குற்றப் புலனாய்வுப் பிரிவு அதிகாரிகள் சிலர் அண்மையில் திடீரென வசதி படைத்தவர்களாக மாறியுள்ளமை குறித்தும் விசாரிக்கப்படவுள்ளது.

நிதிக் குற்றப் புலனாய்வுப் பிரிவின் தலைவராக இருந்த மூத்த பிரதிப் பொலிஸ் மா அதிபர் ரவி வைத்யாலங்கார மற்றும் அவருக்கு நெருக்கமான அதிகாரிகளை விசாரணைக்காகக் குற்றப் புலனாய்வுப் பிரிவு அழைத்துள்ளது.

பொலிஸ் மா அதிபர் பூஜித ஜயசுந்தரவின் உத்தரவின் பேரிலேயே இந்த விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

அதேவேளை, நிதிக் குற்றப் புலனாய்வுப் பிரிவின் தலைவராக இருந்த மூத்த பிரதிப் பொலிஸ்மா அதிபர் ரவி வைத்யாலங்காரவை அந்தப் பதவியில் இருந்து நீக்கக் கடந்த செவ்வாயன்று அமைச்சரவைக் கூட்டத்தில் முடிவு செய்யப்பட்டது.

மிக் போர் விமானக் கொள்வனவு தொடர்பான விசாரணைகள் தொடர்பான இரகசியங்களைச் சிங்கப்பூரைச் சேர்ந்த இரண்டு சந்தேக நபர்களுக்கு வெளியிட்டார் என்று அவர் மீது குற்றச்சாட்டுகள் எழுந்துள்ளன.

கடந்த ஜனவரி 16ஆம் திகதி பிரதிப் பொலிஸ்மா அதிபர் ரவி வைத்யாலங்கார திடீரெனச் சிங்கப்பூருக்கு மேற்கொண்ட இரகசியப் பயணத்தை அடுத்தே இந்த தொடர்புகள் அம்பலமாகின. (ஐ)

# காரைநகரில் இன்று மாலை வேளை நடக்கும் சிறப்புப் பட்டிமண்டபம்

## நடுவராக கம்பவாரிதி ஜெயராஜ்



யாழ்ப்பாணம், மார்ச் 01

காரைநகர் கிழவன்காடு கலாமன்றம் நடத்தும் ஸ்தாபகதின நிகழ்வு, இன்று வெள்ளிக்கிழமை மாலை 5 மணிக்கு, கலாமன்ற மனோன்மணி கலையரங்கில் நடைபெறும்.

இன்றைய நிகழ்வில் நாட்டியாஞ்சலியைத் தொடர்ந்து சிறப்புப் பட்டிமண்டபம் இடம்பெறும். நடுவராக கம்பவாரிதி இ.ஜெயராஜ் செயற்படுவார்.

ஸ்ரீமதி ஸ்ரீதேவி கண்ணதாசனின் நெறியாள்கையில் நாட்டியாஞ்சலியும் தொடர்ந்து "யாழ். மண்ணின் பெருமைக்குப் பெரிதும் காரணம்" - படிப்பே! பண்பாடே! பக்தியே!" எனும் தலைப்பில் பட்டிமண்டபமும் நடைபெறும்.

'படிப்பே!' என்ற அணியில் கோப்பாய் ஆசிரியர் பயிற்சிக் கலாசாலையின் பிரதி அதிபர் செந்தமிழ் சொல்லருவி ச.லலீசன், யாழ் பல்கலைக்கழக கல்வியல் விரிவுரையாளர் இ.சர்வேஸ்வரா ஆகியோரும் -

'பண்பாடே!' என்ற அணியில் பேராதனைப் பல்கலைக்கழக சிரேஷ்ட விரிவுரையாளர் கலாநிதி ஸ்ரீபிரசாந்தன், கம்பன் கழக அமைப்பாளர் அ.வாசுதேவா ஆகியோரும் -

'பக்தியே!' என்ற அணியில் வலம்புரி பத்திரிகை பிரதம ஆசிரியர் ந.விஜயசுந்தரம், வன்னிப் பிரதேச இலங்கை வங்கி பிராந்திய முகாமையாளர் காரை. கு.சிவஞானசுந்தரம் ஆகியோரும் வாதிடுவார்கள்.

நிகழ்வுக்கான போக்குவரத்து வசதியும் செய்யப்பட்டுள்ளது. யாழ் நகர் கே.கே.எஸ்.வீதி, இல.428 என்ற முகவரியில் அமைந்துள்ள கலாமன்ற கிளை (வண்ணை சிவன் கோயில் அருகில்) முன்பாகவிருந்து மாலை 4.45 மணிக்கு பஸ் சேவை இடம்பெறும் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது. (இ)

# காஷ்மீர் எல்லையில் மீண்டும் பாகிஸ்தான் அத்துமீறி தாக்கு!



காஷ்மீர், மார்ச் 01

காஷ்மீர் எல்லையில் மீண்டும் பாகிஸ்தான் இராணுவம் அத்துமீறி தாக்குதல் நடத்தியதையடுத்து இந்திய இராணுவம் பதில் தாக்குதல் நடத்தியுள்ளது.

ஜம்மு - காஷ்மீரின் பூஞ்ச் மாவட்டத்தில் உள்ள கிருஷ்ணா பள்ளத்தாக்கு பகுதி எல்லையில் பாகிஸ்தான் இராணுவம் நேற்று வியாழக்கிழமை துப்பாக்கிச்சூடு நடத்தியுள்ளது. சுமார் ஒரு மணி நேரத்திற்கு மேல் இந்த தாக்குதல் இடம்பெற்றுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

எனினும், எல்லையில் மீண்டும் பாகிஸ்தான் படைகள் அத்துமீறி தாக்குதல் நடத்தலாம் என்பதால் இந்தியத் படை தயார் நிலையில் உள்ளது.

புல்வாமா தாக்குதலைத் தொடர்ந்து இந்தியா பாகிஸ்தான் எல்லை யில் பதற்றம் அதிகரித்துள்ளது. எல்லையில் பாகிஸ்தான் இராணு வம் தொடர்ந்து துப்பாக்கி சூடு நடத்தி வருகின்றது. இதற்கு இந்திய இராணுவமும் பதில் தாக்குதல் நடத்தி வருகின்றது. (ஐ)

# பாகிஸ்தானுக்கு தகுந்த பதிலடி!

## அவசர ஆலோசனையில் மோடி அதிரடி உத்தரவு



புதுடில்லி, மார்ச் 29

சரியான நேரத்தில் பாகிஸ்தானுக்குச்சரியான-தக்க பதிலடி கொடுக்க வேண்டும் என்று இந்திய பாதுகாப்பு தொடர்பான உயர்மட்டக்குழு கூட்டத்தில் முடிவு செய்யப்பட்டுள்ளது.

நாட்டின் பாதுகாப்பு நிலவரம் குறித்து, முப்படைத் தலைவர்களுடன் பிரதமர் மோடி அவசர ஆலோசனைமேற்கொண்டார்.

இந்திய விமானப்படை விமானி அபிநந்தன், பாகிஸ்தான் ராணுவ வீரர்களால் சிறைபிடிக்கப்பட்ட நிலையில் டில்லியில் நேற்று பிரதமர் நரேந்திர மோடி தலைமையில் பாதுகாப்பு தொடர்பாக உயர் மட்ட குழு ஆலோசனை கூட்டம் நடைபெற்றது.

இதில், பாகிஸ்தானிடம் சிக்கியுள்ள இந்திய விமானி அபிநந்தன் மீட்பது தொடர்பாகவும், பாகிஸ்தானுக்கு தக்க பதிலடி கொடுப்பது தொடர்பாகவும் ஆலோசிக்கப்பட்டுள்ளது.

சுமார் 90 நிமிடங்கள் ஆலோசனைக் கூட்டத்தில், இந்திய தரைப்படை, கடற்படை, மற்றும் வான் படை ஆகிய முப்படைகளுக்கும் முழு சுதந்திரம் அளிப்பதாக பிரதமர் மோடி தெரிவித்துள்ளார்.

அபிநந்தனை பகடையாகப் பயன்படுத்தி பாகிஸ்தான் விடுக்கும் எந்தவித அழுத்தத்துக்கும் பணிந்து போகாமல், சரியான நேரத்தில் பாகிஸ்தானுக்குச் சரியான தக்க பதிலடி கொடுக்க வேண்டும் என்று பாதுகாப்பு தொடர்பான உயர்மட்டக்குழு கூட்டத்தில்முடிவுசெய்யப்பட்டுள்ளது.

இந்தக் கூட்டத்தில் தேசிய பாதுகாப்பு ஆலோசகர் அஜித் டோவல், பாதுகாப்புத்துறை அமைச்சர் நிர்மலா சீதாராமன், உளவுத்துறை அதிகாரிகள் மற்றும் முப்படைகளின் தளபதிகள் பங்கேற்றனர். (ஐ)

# சகல விமான நிலையங்களையும் மூட பாகிஸ்தான் அரசு உத்தரவு!

இஸ்லாமாபாத், மார்ச் 01

அனைத்து முக்கிய விமான நிலையங்களையும் மூட பாகிஸ்தான் அரசு உத்தரவிட்டுள்ளது.

இதனால் பயணிகள் விமானங்கள் உள்ளிட்ட அனைத்து விமானங்களும் பாகிஸ்தானில் இயக்கப்படவில்லை. மறு உத்தரவு வரும் வரை விமான நிலையங்கள் மூடப்பட்டிருக்கும் என்று பாகிஸ்தான் அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

கட்டார் ஏயார்லைன்ஸ் போன்ற சில விமான நிறுவனங்கள் இஸ்லாமாபாத், கராச்சி, பைசலாபாத், லாகூர், முல்தான், பொவர் ஆகிய நகரங்களுக்கு தனது விமான சேவையை ரத்து செய்துள்ளன.

மேலும் ஏயார் கனடா விமான





நிறுவனமும் இந்தியாவுக்கான தனது விமான சேவையை ரத்து செய்துள்ளதாக அறிவித்துள்ளது.

இதனைத் தொடர்ந்து இந்தியாவில் இருந்து பாகிஸ்தானுக்கு செல்லும் சம்ஜவுதா ரயில் சேவை நிறுத்தப்பட்டுள்ளதாகவும் அறிவிக்கப்பட்டுள்ளது. ரயில் சேவை பாதிப்பால் பயணிகளை பேருந்து மூலம் அழைத்து செல்வதற்கான ஏற்பாடுகளும் செய்யப்பட்டுள்ளன.

இதேவேளை, இந்திய விமானி அபிநந்தனை பாகிஸ்தான் இராணுவத்தினர் கட்டுப்பாட்டில் வைத்துள்ளனர். விமானி அபிநந்தனை மீட்கும் முயற்சியில் மத்திய அரசு தீவிரமாக ஈடுபட்டுள்ளது.

இந்திய விமானப்படை வீரர் அபிநந்தனை பத்திரமாக இந்தியாவிடம் உடனடியாக ஒப்படைக்க வேண்டும் என பாகிஸ்தானில் உள்ள இந்திய தூதர், அந்நாட்டு வெளியுறவு அமைச்சகத்திடம் நேரில் வலியுறுத்தியுள்ளார். இதனால் இரு நாடுகளுக்கிடையே பதற்றம் நீடித்து வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (ஐ)

# மீண்டும் மோடியே பிரதமராக வாய்ப்பு

## எடியூரப்பா நம்பிக்கை



புதுடில்லி, மார்ச் 01

எதிர்வரும் மக்களவை தேர்தலில் வெற்றி பெற்று பிரதமர் நரேந்திர மோடி மீண்டும் பிரதமராகுவதற்கான வாய்ப்பு காணப்படுவதாக பா.ஜ.க தலைவர் எடியூரப்பா தெரிவித்துள்ளார்.

காஷ்மீர் தாக்குதலைத் தொடர்ந்து இந்தியா - பாகிஸ்தானுக்கு இடையில் ஏற்பட்டுள்ள முறுகல் நிலையைத் தொடர்ந்து செய்தியாளர்களைச் சந்தித்த எடியூரப்பா இவ்வாறு குறிப்பிட்டுள்ளார். இதன்போது தொடர்ந்து தெரிவித்த அவர்,

பாலக்கோட் பகுதியில் விமானப்படை தாக்குதல் நடத்தியுள்ளதால் கர்நாடகாவில் மொத்தமுள்ள 28 தொகுதிகளில் 22 தொகுதிகளில் பா.ஜ.க வெற்றிபெறும்.

அத்துடன் பாலகோட் பகுதியில் இந்திய விமானப்படை தாக்குதலால் நாடு முழுவதும் மோடிக்கு ஆதரவான அலை வீசுகிறது. இதன் காரணமாக மக்களவைத் தேர்தலில் மோடி வெற்றிபெற்று மீண்டும் பிரதமராகுவதற்கான வாய்ப்புகள் காணப்படுகின்றன என தெரிவித்துள்ளார்.

# இந்திய விமானியான அபிநந்தன் மரியாதையாக நடத்தப்படுவார்!

## பாகிஸ்தான் இராணுவம் கூறுகிறது

*இஸ்லாமாபாத், மார்ச் 01*

*பாகிஸ்தான் இராணுவத்தினரால் சிறைபிடிக்கப்பட்ட இந்திய விமானி அபிநந்தன் பாதுகாப்பாகவுள்ளார் என பாகிஸ்தான் இராணுவப் படையின் செய்தித் தொடர்பாளர் மேஜர் ஜெனரல் ஆசிப் கபூர் தெரிவித்துள்ளார்.*

*இது தொடர்பில் அவர் டுவிட்டரில் பதிவிட்டுள்ளார். இந்த பதிவில், இந்திய விமானப்படையின் விமானியொருவர் பாகிஸ்தான் இராணுவத்தின் கட்டுப்பாட்டில் வைக்கப்பட்டுள்ளார். விங் கொமாண்டர் அபிநந்தன் இராணுவ விதிகளுக்கு உட்பட்டு மரியாதையுடன் நடத்தப்படுவார் என்றும் தெரிவித்துள்ளார்.*



# விமானி அபிநந்தனை பத்திரமாக உடனே ஒப்படைக்க வேண்டும்!

## இந்தியத் தூதரகம் பாகிஸ்தானிடம் நேரில் வலியுறுத்தல்

புதுடில்லி, மார்ச் 01

இந்திய விமானப்படை வீரர் அபிநந்தனை பத்திரமாக உடனடியாக திருப்பி ஒப்படைக்க வேண்டும் என பாகிஸ்தானில் உள்ள இந்திய தூதர் அந்நாட்டு வெளியுறவு அமைச்சகத்திடம் நேரில் வலியுறுத்தி உள்ளார்.

புல்வாமா தாக்குதலுக்குப் பதிலடி கொடுக்கும் விதமாக, ஜம்மு காஷ்மீரில் எல்லைக் கட்டுப்பாட்டுக் கோட்டு பகுதியில் உள்ள பயங்கரவாத முகாம்களை அழிக்கும் நடவடிக்கையை இந்திய ராணுவம் மேற்கொண்டது.

கடந்த செவ்வாய்க்கிழமை இந்திய விமானப்படை விமானங்கள், பாகிஸ்தான் ஆக்கிரமிப்பு காஷ்மீர் பகுதிக்குள் ஊடுருவி பயங்கரவாதிகளின் முகாம்களை தகர்த்தெறிந்தன.

அதன் பின்னர் எல்லையில் பதற்றம் அதிகரித்தது. இந்நிலையில் பாகிஸ்தான் எல்லையில் நுழைந்த இந்தியாவின் போர் விமானம் சுட்டு வீழ்த்தப்பட்டதாகவும், விமானி ஒருவரைப் பிடித்து வைத்திருப்பதாகவும் பாகிஸ்தான் தெரிவித்திருந்த நிலையில் விமானி அபிநந்தன் மாயமானதாக இந்திய தரப்பிலும் தெரிவிக்கப்பட்டது. பாகிஸ்தான் பிடியில் விமானி அபிநந்தன் உள்ளமை உண்மைதான் என்று வெளியுறவுத் துறையும் உறுதிப்படுத்தியுள்ளது.

இந்நிலையில், இந்திய விமானி அபிநந்தனை உடனடியாக பத்திரமாக ஒப்படைக்க வேண்டும் என்று பாகிஸ்தான் வெளியுறவுத்துறை அமைச்சகத்திடம், பாகிஸ்தானுக்கான இந்திய தூதர் நேரில் வலியுறுத்தி உள்ளார்.

டில்லியில் உள்ள இந்தியாவுக்கான பாகிஸ்தான் துணை தூதரக அதிகாரியை நேரில் அழைத்து வலியுறுத்திய நிலையில் மத்திய அரசு அடுத்த கட்ட நடவடிக்கை எடுத்துள்ளது.




பாகிஸ்தானில் உள்ள இந்திய தூதரகமும் அபிநந்தனை உடனடியாக மற்றும் பாதுகாப்புடன் திருப்பி ஒப்படைப்பதற்கான நடவடிக்கைகளை எடுக்கும்படி பாகிஸ்தான் வெளிவிவகார துறையிடம் வலியுறுத்தி உள்ளது. (ஐ)

# 36 மணிநேர போராட்டத்துக்கு பின் பனிப்பொழிவில் சிக்கிய ரயில் மீட்பு!

நியூயோர்க், மார்ச் 01

அமெரிக்காவின் 183 பயணிகளுடன் பனிப்பொழிவில் சிக்கிய ரயில் ஒன்று, 36 மணிநேரப் போராட்டத்துக்குப் பின்னர்மீட்கப்பட்டுலொஸ் ஏஞ்சல்ஸ்ஸை சென்றடைந்துள்ளது.

சியாட்டில் - லொஸ் ஏஞ்சல்ஸ் வழித்தடத்தில் பயணிகள் ரயில் ஒன்று கடந்த ஞாயிற்றுக்கிழமை சென்றுகொண்டிருந்தபோது பனிப்பொழிவு அதிகமாகக் காணப்பட்டதால் ரயில் பாதையில் மரக்கிளைகள்



விழுந்தன.இதனைத் தொடந்து, ரயில் திடீரென அப்பகுதியில் நின்ற நிலையில் அதன் எஞ்சின் முற்றிலுமாகச் செயலிழந்தது.


இதனால் பயணிகள் அனைவரும் பதற்றம் அடைந்ததைத் தொடர்ந்து, உடனடியாக ரயில்வேத் துறையினருக்கு தகவல் கொடுக்கப்பட்டது.

அதன் பின்னர் வந்த ரயில் எஞ்சின்மற்றும் ஊழியர்களால், அன்று இரவு முழுவதும் பழுது பார்க்கப்பட்டும் ரயிலை உடனடியாக இயக்க முடியவில்லை. எனினும், ரயில்வே ஊழியர்கள் கடுமையாக போராடியுள்ளனர்.

சுமார் 36 மணிநேரத்துக்கு பிறகு எஞ்சினின் கோளாறு சரி செய்யப்பட்டது. இதனால்நேற்று முன் தினம் காலை ரயில் மீண்டும் இயங்கத் தொடங்கியது.

இந்த தடங்கலின் போதும் ரயிலில் பயணம் செய்து 183 பயணிகளுக்கும் அனைத்து உதவிகளும் செய்யப்பட்டமையால், அவர்களுக்கு எவ்வித பாதிப்பும்ஏற்படவில்லைஎன்பது குறிப்பிடத்தக்கது. (ஐ)

# நேபாளத்தில் ஹெலி விபத்து அமைச்சர் உட்பட 6 பேர் சாவு!



காத்மண்டு, மார்ச் 01


நேபாளத்தில் இடம்பெற்ற ஹெலிகொப்டர் விபத்தில் சுற்றுலாத்துறை அமைச்சர் உள்ளிட்ட 6 பேர்உயிரிழந்துள்ளனஎனச் செய்திகள் வெளியாகியுள்ளன.

நேபாளத்தின் தெஹ்ரானம் மாவட்டத்தில் சுற்றுலாத்துறை அமைச்சர் ரவீந்திர ஆதிகாரி உள்ளிட்ட 6 பேர் ஒரு ஹெலிகொப்டரில் பயணித்துக் கொண்டிருந்தபோது இந்த விபத்து நேற்று முன் தினம் இடம்பெற்றுள்ளது.

ஹெலிகொப்டர் திடீரென கீழே வீழ்ந்து நொறுங்கியதாகச் சிவில் விமான போக்குவரத்து அதிகார சபைத் தகவல்கள் தெரிவிக்கின்றன. (ஐ)

# டிரம்ப் - கிம் உச்சி மாநாடு படுதோல்வி!

## எந்த உடன்பாடும் எட்டப்படவில்லை



ஹனோய், மார்ச் 01

வியட்நாம் ஹனோயில் நடந்த இரண்டாம் நாள் உச்சி மாநாட்டில் ஆக்கபூர்வமான பேச்சுவார்த்தை நடந்தது. எனினும் எந்தவித உடன்பாடும் எட்டப்படவில்லை என வெள்ளை மாளிகை தெரிவித்துள்ளது.

கொரிய தீபகற்பத்தில் அணுவாயுதத்தை ஒழிக்கும் திட்டம் தொடர்பான அமெரிக்கா– வடகொரியாவுக்கிடையில் இடம்பெற்ற குறித்த மாநாட்டில் அணு ஆயுதத்தை முழுமையாக கைவிடுவதற்கு வடகொரியா இணங்குமா என்ற பலத்த எதிர்பார்ப்பு நிலவிய நிலையில் வெள்ளை மாளிகை இவ்வறிவிப்பை வெளியிட்டுள்ளது.

மாநாட்டின் இரண்டாவது தினமான நேற்று இரு நாட்டுத் தலைவர்கள் இடையே முக்கிய ஒப்பந்தங்கள் கையெழுத்தாகும் என எதிர்பார்க்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (ஐ)

# தென்னாபிரிக்காவில் எதிர்வரும் மே 8 தேர்தல்



ஜொகன்னர்பேர்க், மார்ச்.01

தென்னாபிரிக்காவில் எதிர்வரும் மே மாதம் 8ஆம் திகதி பொதுத் தேர்தல் நடைபெறும் என ஜனாதிபதி சிரில் ரமபோசா அறிவித்துள்ளார்.

1994 ஆம் ஆண்டு தென்னாபிரிக்காவில் நிறவெறிக் கொள்கை முடிவுற்ற பிறகு, ஜனநாயகபூர்வமான முறையில் தேர்தல்கள் நடத்தப்பட்டு மக்கள் பிரதிநிதிகள் தேர்ந்தெடுக்கப்படுகின்றனர்.

நாடாளுமன்ற கீழ் சபையில் (தேசியசபை) பெரும்பான்மைபெறும் கட்சியின் தலைவரே ஜனாதிபதியாக தேர்ந்தெடுக்கப்படுகிறார்.

அவ்வகையில் மே 8 ஆம் திகதி பொதுத்தேர்தலை நடத்த முடிவு செய்யப்பட்டது. இதற்காக, அரசமைப்பு சட்ட விதிகளின்படி தேசிய சபைகலைக்கப்பட்டது. அதன் பின்னர் தேர்தல் நடைமுறைகள் ஆரம்பமாகியுள்ளன.

இந்நிலையில், மே 8 ஆம்திகதிபொதுத்தேர்தல் நடைபெற உள்ளதாக ஜனாதிபதி முறைப்படி அறிவிப்பு வெளியிட்டுள்ளார்.

மேலும்வாக்காளர்கள் அதிக அளவில் வாக்குச் சாவடிக்கு வந்து வாக்குகளைப் போடுவதற்கு ஏதுவாக, அந்த நாளை பொது விடுமுறையாக அறிவித்தும் உத்தரவிட்டுள்ளார். (ஐ)

# வடகொரியாவின் தலைவர்கள் ரயிலில் மட்டும் பயணிப்பது ஏன்?

பியொங்யாங், மார்ச் 01

வடகொரியாவின் தலைவர்கள் ரயிலில் மட்டும் பயணிப்பதை வழக்கமாகக் கொண்டுள்ளனர்.

இந்த வழக்கத்தை கிம் ஜோங்-உன்னின் தாத்தா கிம் இல்-சுங் தொடங்கி வைத்தார்.

கிம் இல்-சுங் தனது சொந்த ரயிலில் வியட்நாமுக்கும், மேற்கு ஐரோப்பியநாடுகளுக்கும் சென்றார்.



விமானத்தில் செல்வதற்கு அவருக்கிருந்த அச்சமே இதற்குக் காரணமாகும்.

இந்த ரயில்கள் ஆடம்பர, தோலாலான சோபாக்களை. கொண்டதும், கூட்டம் நடத்துவதற்கான அறைகளை கொண்டதுமாக இருந்தன.

கிம் ஜாங்-உன்னுக்குச் சொந்தமான ரயிலில் 21 குண்டு துளைக்காத பெட்டிகள் உள்ளன. அலங்கரிக்கப்பட்ட சோபாக்களும் இதிலுள்ளன. பாதுகாப்பு ரயில் ஒன்று முன்னால் செல்ல இன்னொன்று பின்னால் வருகிறது. (ஐ)

# நிக்கோபார் தீவுகளில் லேசான நிலநடுக்கம்!

புதுடில்லி, மார்ச் 01

அந்தமானின் நிகோபார் தீவுகளில் நேற்று லேசான நிலநடுக்கம் ஏற்பட்டுள்ளது.

அந்தமானின் நிக்கோபார் தீவுகளில் நேற்று காலை 5.30 மணிக்கு லேசான நிலநடுக்கம் ஏற்பட்டுள்ளது. இந்த நிலநடுக்கம், ரிச்டர் அளவு கோலில் 4.8 அலகுகளாகப் பதிவாகி உள் ளது.

நிலநடுக்கம் காரணமாக சில வீடுகளில் அதிர்வுகள் காணப்பட்டன எனவும், எனினும், யாருக்கும் காயம் ஏற்பட்டதாகவோ, பெரிய அளவில் பொருள்சேதம்ஏற்பட்டதாகவோ உடனடிதகவல் ஏதும் கிடைக்கவில்லை எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது

# கிம்முடன் இரவு விருந்து அருமையாக இருந்தது!

## டொனால்ட் டிரம்ப் தெரிவிப்பு



அமெரிக்க அதிபர் டொனால்ட் டிரம்ப் மற்றும் வடகொரியா தலைவர் கிம் ஜோங் உன் இடையிலான இரண்டாவது உச்சி மாநாடுவியட்நாமில்நடைபெற்று வருகிறது. இரண்டு நாள் நடக்கும் உச்சிமாநாட்டில் நேற்றைய தினம் கிம் ஜோங் உன் மற்றும் டிரம்ப் இரவு விருந்தின்போது சந்தித்துப் பேசினார்கள்.

இரண்டாவது தினமான நேற்று இரு நாட்டு தலைவர்கள் இடையே முக்கிய ஒப்பந்தங்கள் கையெழுத்தாகின.

கொரிய தீபகற்பத்தில் அணு ஆயுத ஒழிப்பில் ஈடுபடுவதற்கான திட்டங்கள் குறித்து இரு தரப்பினரும் விரிவாகக் கலந்துரையாடினர்.

நேற்று முன் தினம் புதன்கிழமை நடந்த சந்திப்பில் செய்தியாளர்கள் சுருக்கமான கேள்விகள் கேட்கவே அனுமதிக்கப்பட்டனர். மேலும் இரு நாட்டுத் தலைவர்களும் தனியாகச் சந்தித்துப் பேசினார்கள்.

நேற்று முன் தினம் இரவு விருந்தில் இரு நாட்டு தலைவர்களும் கலந்து கொண்டனர். அப்போது அமெரிக்க பாதுகாப்பு செயலர் மைக் பாம்பியோ மற்றும் கிம்மின் மூத்த ஆலோசகர் கிம் யாங் - சோல் ஆகியோர் உடனிருந்தனர்.

கிம்முடனான சந்திப்புக்கு பிறகு டிரம்ப் தனது ட்வீட்டில் "வியட்நாமில் வடகொரியாவின் கிம் ஜாங் உன் உடனான இரவு விருந்தும் சந்திப்பும் அருமையாக இருந்தன. பேச்சு நல்லபடியாக நடைபெற்றது" என தெரிவித்துள்ளார்.

முன்னதாக, புதன்கிழமை சந்திப்பின்போது, கொரிய போர் முறைப்படி அதிகாரபூர்வமாக முடிவுக்கு வந்ததாக அறிவிக்கப்படுமா என செய்தியாளர்கள் கேட்ட போது, "பார்க்கலாம்..." என்றார் டிரம்ப். (ஐ)

காலைக்கதிர் Kalaikathir



# பாகிஸ்தானுக்குள் ஊடுருவி

# வான் தாக்குதல் நடத்தியவர்கள் இவர்கள் தானா?

பாகிஸ்தானுக்குள் செவ்வாய்க்கிழமை போர் விமான தாக்குதல் நடத்தியவர்கள் இவர்கள்தான் என்று இந்திய விமானப்படை வீரர்களின் புகைப்படங்கள் சமூக ஊடகங்களில் வைரலாக பரவி வருகின்றன.

இந்தப் புகைப்படங்கள் சமூக ஊடக குழுக்களிலும், வாட்ஸ் - அப் குழுக்களிலும் பல்லாயிரம் முறை பகிரப்பட்டு வருகின்றன.

இந்திய வான் தாக்குதலுக்கு பதிலடியாக இந்திய விமானப்படையின் இரண்டு ஜெட் விமானங்களைச் சுட்டு வீழ்த்தியதாக புதன்கிழமை பாகிஸ்தான் கூறியது.

ஒரு விமானம் பாகிஸ்தான் பகுதியில் விழுந்தது என்றும் அதன் விமானி கைது செய்யப்பட்டார் என்றும் பாதுகாப்பு படைகளின் செய்தித்தொடர்பாளர் தெரிவித்தார்.

ஒரு விமானியை காணவில்லை என்று இந்தியாவும் உறுதி செய்தது.

பெப்ரவரி 14ஆம் திகதி இந்திய துணை ராணுவ படை மீது ஆயுதக்குழுக்கள் தாக்குதல் தொடுத்ததில் 40 இற்கும் மேலான சி.ஆர்.பி.எஃவ் படை வீரர்கள் பலியானார்கள். அதனை அடுத்து இரு நாடுகளுக்கிடையே பதற்றம் அதிகரித்தது.

இதற்கு மத்தியில் பல இந்திய சமூக ஊடகங்கள் இந்திய விமானப் படை வீரர்கள் படங்களை பகிரத் தொடங்கின.

ஆனால், இந்த புகைப்படங்களுக்கும் பாகிஸ்தானில் இந்தியா மேற்கொண்டதாக கூறப்படும் வான் தாக்குதலுக்கும் எந்தத் தொடர்பும் இல்லை.

### முதல் புகைப்படம்

பாகிஸ்தானில் வான் தாக்குதல் நடத்தியவர் இவர்தான் என்று கையில் ஹெல்மட் வைத்திருக்கும் ஒரு பெண்ணின் புகைப்படம் சமூக ஊடகங்களில் பரவலாக பகிரப்படுகிறது.

அந்த பெண்ணின் பெயர் அனிதா




ஷர்மா என குறிப்பிடப்பட்டிருக்கிறது.

அந்த ப் பதிவுகளில், AnitaSharma துணிச்சலான இந்திய வீரரை வாழ்த்துங்கள். பாகிஸ்தானில் 300 பயங்கரவாதிகள் கொல்லப்பட்ட தாக்குதல் நடவடிக்கையில் இருந்த ஒரே பெண் இவர்தான் என்று அதில் குறிப்பிடப்பட்டிருந்தது.



பாகிஸ்தான் மீது மேற்கொள்ளப்பட்ட ராணுவ நடவடிக்கை குறித்து இந்திய ராணுவமோ, இந்த விமானப் படையோ இதுவரை எந்தக் கருத்தையும் தெரிவிக்கவில்லை. பொதுவாக அவர்கள் ராணுவ நடவடிக்கையில் பங்காற்றிய ராணுவத்தினரின் பெயர்களை வெளியிடமாட்டார்கள்.

சமூக ஊடகங்களில் பகிரப்படும் புகைப்படத்தில் இருப்பவர் அவனி சதுர்வேதி. இந்தியாவின் பெண் போர் விமானிகளில் ஒருவர்.

அதுமட்டுமல்ல, துணை விமானி இல்லாமல் போர் விமானங்களை தனியாக இயக்கும் முதல் பெண் விமானியும், இவர்தான்.

### இரண்டாவது புகைப்படம்

மற்றொரு புகைப்படத்தில் இருப்பவர் ஸ்நேகா சகாவத். 2012ஆம் ஆண்டு நடந்த குடியரசு தின அணிவகுப்பில் இந்திய விமானப் படை பிரிவுக்கு இவர்தான் தலைமை தாங்கினார்.

ஆனால் சமூக ஊடகங்களான பேஸ்புக், டுவிட்டர் மற்றும் வாட்ஸ் அப்பில் ஸ்நேகாவின் புகைப்படம் ஊர்வசி ஜரிவாலா என்ற பெயரில் தவறாக பகிரப்படுகிறது. மேலும் அவர், சூரத்தில் உள்ள புல்கா பவனில் படித்தவரென குறிப்பிடப்பட்டுள்ளது.

> “பாகிஸ்தான் மீது மேற்கொள்ளப்பட்ட ராணுவ நடவடிக்கை குறித்து இந்திய ராணுவமோ இந்த விமானப் படையோ இதுவரை எந்தக் கருத்தையும் தெரிவிக்கவில்லை. பொதுவாக அவர்கள் ராணுவ நடவடிக்கையில் பங்காற்றிய ராணுவத் தினரின் பெயர்களை வெளியிட மாட் டார்கள்.”

ஸ்நேகா தேசிய பாதுகாப்பு அகாடெமிக்கு 2007ஆம் ஆண்டு தேர்ந்தெடுக்கப்பட்டார். சிறந்த பெண் விமானி என




ஹைதராபாத் பயிற்சி மைய விருதைப் பெற்றார். ஸ்நேகா ராஜஸ்தான் கோவதி பகுதியைச் சேர்ந்தவர்.

### மூன்றாவது புகைப்படம்

புல்வாமாத் தாக்குதலுக்கு பழிவாங்கிய போர் விமானிகள் 12 பேர் இவர்கள் தான் என ஒரு புகைப்படம் பகிரப்படுகிறது.

புகைப்படத்தை ஆராயும் தொழில் நுட்பத்தை கொண்டு ஆராய்ந்ததில் அந்த புகைப்படம் 2015ஆம் ஆண்டு நடந்த இந்திராதனுஷ் பயிற்சியில் எடுக்கப்பட்டது என தெரியவந்துள்ளது. றோயல் விமானப் படையும், இந்திய விமானப் படையும் இணைந்து அந்த 10 நாள் பயிற்சியை மேற்கொண்டன.




# 7 பேருக்கு மட்டும் தெரிந்த தாக்குதல் ரகசியம்

காஷ்மீரில் உள்ள புலவாமா மாவட்டத்தில் கடந்த 14 ஆம் திகதி 40 மத்திய ரிசர்வ் பொலிஸ் படையைச் சேர்ந்த வீரர்களை கொடூரமாக உயிர் இழக்க வைத்த ஜெய்ஷ் இ முகமது பயங்கரவாத இயக்கம், தற்கொலைப்படைகளை பயன்படுத்தி இந்தியாவில் பெரிய சேதங்களை ஏற்படுத்த திட்டமிட்டு வந்தது.

காஷ்மீரில் உள்ள புலவாமா மாவட்டத்தில் கடந்த 14ஆம் திகதி 40 மத்திய ரிசர்வ் பொலிஸ் படையைச் சேர்ந்த வீரர்களை கொடூரமாக உயிர் இழக்க வைத்த ஜெய்ஷ் இ முகமது பயங்கரவாத இயக்கம், தற்கொலைப்படைகளை பயன்படுத்தி இந்தியாவில் பெரிய சேதங்களை ஏற்படுத்த திட்டமிட்டு வந்தது. அதன் காரணமாகத்தான் இந்தியாவிலிருந்து 60 கி.மீற்றர் தூரத்திலுள்ள பாலகோட் என்ற பகுதியில் அமைக்கப்பட்டிருந்த நட்சத்திர ஹோட்டல் போன்ற அனைத்து வசதிகளையும் கொண்ட முகாமில் தற்கொலைக்கு தயாராக உள்ள 325 இளைஞர்களை வரவழைத்து, அவர்களுக்கு பயிற்சியை அளித்துவந்தது. இந்த 325 பேர்களில், 107 பேர் புதிதாக இந்தப் பயிற்சிக்கு சேர்ந்தவர்கள். அவர்களுக்கு மூளைச் சலவை செய்து தற்கொலைப்படையாக மாற்ற இங்கு பயிற்சி அளிக்கப்பட்டு வந்தது.

14 ஆம் திகதி நடந்த சம்பவத்துக்குப் பிறகு 'றோ' பிரிவு, பாகிஸ்தானில் ஜெய்ஷ்




இ முகமது பயங்கரவாதிகள் 6 இடங்களில் உள்ள தங்கள் முகாம்களில் இருந்து இந்தியா மீது அடுத்த தாக்குதலை அரங்கேற்ற திட்டமிட்டுள்ளார்கள் என்று கண்டுபிடித்தது. அதில் ஒன்று ஜெய்ஷ் இ முகமது பயங்கரவாத இயக்கத்தின் மிகப் பழமையான பாலகோட் பயிற்சி முகாம். இதில் எந்தெந்த இடங்களில் தாக்குதலை நடத்தினால் அப்பாவி பொது மக்களுக்கு சேதம் ஏற்படாது என்றவகையில் முடிவுகள் மேற்கொள்ளப்பட்டன. இது ராணுவத்தாக்குதல் அல்ல. பயங்கரவாதிகள் மீதான தாக்குதல். நம்மீது மேலும் தாக்குதல் நடத்துவதை தடுக்கும் நடவடிக்கை என்ற வகையிலேயே இந்தநடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு, இந்த துல்லிய தாக்குதலுக்கு பிரதமர் மோடி 18 ஆம் திகதி அனுமதி கொடுத்தார்.

25ஆம் திகதி பாலகோட் முகாமில் 300 முதல் 350 வரையிலான பயங்கரவாதிகள் இருக்கிறார்கள் என்று உளவுத் தகவல் உறுதிப்படுத்தியபிறகு, பிரதமர் தலைமையில் தேசிய பாதுகாப்பு ஆலோசகர் அஜித்தோவல், விமானப்படை தலைவர் வி.எஸ்.தனோவா, ராணுவப் படை தலைவர் பிப்பின் ராவத், கப்பல் படை தலைவர் சுனில் லன்பா மற்றும் 'ரா', உளவுப்பிரிவு தலைவர்கள் ஆகிய 7 பேர் மட்டுமே ரகசியமாக இந்தத் தாக்குதலுக்கு முடிவு எடுத்தனர். 1971ஆம் ஆண்டு இந்தியா - பாகிஸ்தான் போருக்குப்பிறகு, இப்போதுதான் இந்திய விமானப்படை விமானங்கள் எல்லைதாண்டி தாக்குதலை நடத்தியுள்ளன.

இந்தத் தாக்குதல் நடத்திய 'மிராஜ்' போர்விமானங்கள் எல்லாம் எல்லைப் பகுதியில் இருந்து புறப்படாமல் மத்திய பிரதேச மாநிலத்தில் உள்ள குவாலியரில் இருந்தே புறப்பட்டன. நள்ளிரவு 1.30 மணிக்கு குவாலியரில் இருந்து புறப்பட்ட போர்விமானங்கள் தம்பணியை வெற்றிகரமாக முடித்துவிட்டு 4 மணிக்கு திரும்பின. அன்று இரவு முழுவதும் பிரதமர் உள்பட அந்த 7 பேரும் தூங்காமல் விழித்திருந்தனர். இவ்வளவு பெரியதாக்குதலை வெற்றிகரமாக முடித்து, இந்தியா மீது தாக்குதல் தொடுக்க பயிற்சி அளிக்கப்பட்ட 325 பயங்கரவாதிகளையும் ஒழித்துக்கட்டிய விமானப் படையினரும், இதற்கான திட்டங்களை தீட்டிய பிரதமர் தலைமையிலான 7 பேரும் நிச்சயம் பாராட்டுக்குரியவர்கள்.

அந்த 7 பேருக்கும் எங்கள் இதயபூர்வமான நன்றி என்று இந்தியா பாராட்டுகிறது. ஆனால், இந்த சம்பவத்தின் தொடர்ச்சியாக நேற்று இந்திய எல்லைக்குள் அத்துமீறி நுழைந்த பாகிஸ்தான் விமானத்தை இந்திய விமானப்படை சுட்டு வீழ்த்தியுள்ளது. மேலும் நுழைந்த 2 விமானங்கள் விரட்டி அடிக்கப்பட்டுள்ளன. நேற்று இந்திய விமானப் படையை சேர்ந்த 2 மிக்21 விமானங்களை சுட்டு வீழ்த்திவிட்டோம். ஒரு விமானி சென்னையை சேர்ந்த அபிநந்தன், தற்போது பாகிஸ்தான் காவலில் இருக்கிறார். காயமடைந்த மற்றொரு விமானி ராணுவ ஆஸ்பத்திரியில் சிகிச்சைப்பெற்று வருகிறார் என பாகிஸ்தான் பிரதமர் இம்ரான் கான் கூறுகிறார். எல்லைப்பகுதியில் இப்போது பதற்றமான சூழ்நிலை நிலவுகிறது.

நன்றி : 'தினத்தந்தி'
ஆசிரிய தலையாங்கம்
28.02.2019

# யோகேஸ்வரியின் ஊழல்களை மறைக்க வக்காலத்து வாங்குகின்றார் றெமிடியஸ்

## வடக்கு அவைத் தலைவர் சி.வீ.கே. விளக்கம்

யாழ்ப்பாணம்,மார்ச் 01

யோகேஸ்வரி பற்குணராஜா தமது பல்வேறு மோசடிகளையும் ஊழல்களையும் மறைப்பதற்கே என் மீது அபாண்டமான குற்றச்சாட்டுக்களைச் சாட்டி வருகிறார். சட்டத்தரணி றெமிடியஸும் அதற்கு வக்காலத்து வாங்குகிறார்.

இவ்வாறு தெரிவித்துள்ளார் வடக்கு மாகாண சபை அவைத் தலைவர் சி.வீ.கே. சிவஞானம்.

அண்மையில் யாழ். மாநகர சபைக் கூட்டத்தில் எதிர்க்கட்சி உறுப்பினர் றெமிடியஸ் முன்வைத்த குற்றச்சாட்டு தொடர்பில் பதிலளிக்கும் ஊடகவியலாளர் சந்திப்பு நேற்று அவைத் தலைவரின் இல்லத்தில் இடம்பெற்றது. இதன்போதே அவர் இவ்வாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்–

கடந்த 24 ஆம் திகதி மாநகர சபை அமர்வின் போது பட்டியல் மாநகர சபை உறுப்பினர்களான சட்டத்தரணி மு.றெமிடியஸ் மற்றும் திருமதி யோகேஸ்வரி பற்குணராஜா ஆகியோர் எமக்கு எதிராக சில அபாண்டமான குற்றச்சாட்டுகளை முன்வைத்து சபையை தவறாக வழிநடத்தியிருந்தனர்.

இவ்வாறு குற்றச்சாட்டு முன்வைக்கும் போது றெமிடியஸ் தேவை என்றால் நான் நீதிமன்றில் வழக்குத் தொடுத்தால் தான் அதனைச் சந்திக்கத் தயார் என்று கூறினார். என்னைப் பொறுத்தவரை இவருக்கு எதிராக ஒரு நீதிமன்றத் தீர்ப்பை நான் எதிர்பார்க்கவில்லை. என்னுடைய விடயத்திலான தீர்ப்பாளர்கள் மாநகரமக்களும் ஏனைய பொதுமக்களும் ஆவர்.

இவரது குற்றச்சாட்டில் புஸ்பலதா என்பவரை நான் நியமித்ததாகவும், அவர் மூலமாக சில ஆவணங்களை மறைத்ததாகவும் கூறுகிறார். நான் 1989 ஆம் ஆண்டிலேயே சேவையிலிருந்து ஓய்வுபெற்றது பற்றி இந்த நாடே அறியும். அவ்வாறு இருக்கையில் இவர் குறிப்பிடும் செல்வி பி.புஸ்பலதா என்பவர் 19.03.1999 ஆம் திகதியே நியமனம் பெற்றுள்ளார். நான் ஓய்வு பெற்று 10 வருடங்களுக்குப் பின்பு நியமனம் பெற்றுள்ள ஒருவரை நான் நியமித்ததாகவும், ஆவணங்களை அவர் மூலமாக மறைத்ததாகவும் கூறுவது அபாண்டமான பொய்யாகும் என நான் வலியுறுத்த விரும்புகிறேன். இந்தத் தகவலை மாநகர ஆணையாளரிடமிருந்து எவரும் உறுதிப்படுத்திக் கொள்ளலாம். இவர்களது கட்சியின் சிபார்சின் பேரிலேயே மாநகர பிரதேசத்திற்கு வெளியே வசித்த இவர் நியமனம் பெற்றதாக ஒரு தகவல் உண்டு.

என்னைப் பொறுத்தவரை நான் சேவையிலிருந்து நீங்கிய 1988/89 காலப்பகுதியில் திடீரெனச் சேவையில் இருந்து நீங்கினேன். அதேபோல 2006 ஆம் ஆண்டிலும் ஒகஸ்ட் மாதம் அளவில் திடீரென ஏற்பட்ட சிறுநீரகப் பாதிப்பு காரணமாகச் சத்திர சிகிச்சைக்குட்பட்டு, வைத்தியசாலையில் இருக்கும் பொழுது என்னைப் பதவி நீக்கவேண்டும் என்று சிலர் அரசியல் காழ்ப்புணர்ச்சி காரணமாக அரசுக்கு முறையிட்டதைத் தொடர்ந்து மாநகர அலுவலகத்துக்குச் செல்லாமலேயே நான் பதவி நீங்கினேன். என்னுடைய சேவைக் காலத்தில் எந்தவொரு ஆவணத்தை நானோ அல்லது வேறு நபர்கள் மூலமாகவோ மறைக்க வேண்டிய தேவை எனக்கு இருக்கவில்லை. ஆகவே இவர்களுடைய வாதமே பொய்யான அடிப்படையில் முன்வைக்கப்பட்டது என்பது இதிலிருந்து தெரிய வருகிறது.

சட்டத்தரணி றெமிடியஸ் எமது பகுதியிலே சிறந்த கிரிமினல் சட்டத்தரணி என்பது எல்லோருக்கும் தெரியும். ஆகவே அந்த வகையிலான வாதத்தையே இந்தச் சபையிலும் முன்வைத்திருக்கிறார்.

அடுத்து இவர்களுக்குரிய பெரிய பிரச்சினையே கஸ்தூரியார் வீதியில் ஏற்கனவே அமைந்துள்ள ஆறு கடைகள் சம்பந்தமானது. இது சம்பந்தமாக இவர்கள் காலத்துக்குக் காலம் என் மீது குற்றம்சாட்டி வருவதும் நான் பதிலளித்து வருவதுமாக இருந்துள்ளது. மாநகர சபையின் முதல் அமர்விலேயே இக்கடைகள் எனது தலைமையில் கட்டப்பட்டன என்று பொய் கூறினார். இதற்கு 14.06.2018 திகதி பதிலளித்து முதல்வருக்குக் கடிதம் எழுதினேன்.

கஸ்தூரியார் வீதிக்கு கிழக்குப்பக்கமாக உள்ள வண்ணான் குளத்திற்கு இடையில் உள்ள மாநகர சபைக் காணியை 1970 களின் முற்பகுதியில் அப்போதைய முதல்வர் அல்பிரட் துரையப்பா இந்தக் கடைகளை அமைத்தவர்களுக்கு வழங்கியிருந்தார். அவ்வாறு காணியைப் பெற்றுக் கொண்டவர்கள் தங்களது செலவில் கடைகளை அமைத்து உப வாடகைக்கு வழங்கி கணிசமான வருமானத்தைத் தாம் பெற்றுக் கொண்டு சபைக்கு நிலவாடகையாக சிறு தொகையை செலுத்தி வந்தனர். துரையப்பாவின் இறப்புக்கு பின்பு 12.08.1975 இல் நான் ஆணையாளராக நியமிக்கப்பட்டேன். அதிலிருந்து நான் சேவையிலிருந்து நீங்கும் வரையான காலம் ஒரு இக்கட்டான நெருக்கடியான காலமாகும். இந்த நிலக் குத்தகை என்பது மாநகர சபை கட்டளைச் சட்டத்தின் பிரிவு 40 (f) (f) (i) இற்கு முரணானது. இந்த சட்ட ஏற்பாட்டின் படி மாநகர சபைக்கு உரித்தாக்கப்பட்ட எந்த காணியையும் அமைச்சர் மற்றும் ஜனாதிபதியின் அங்கீகாரம் இன்றி குத்தகைக்கு வழங்கமுடியாது.

2005 இல் நான் மாநகர ஆணையாளராக நியமனம் பெற்றபோது இந்த விடயம் எனது கவனத்திற்கு கொண்டு வரப்பட்டது. அப்பொழுது எமக்கு இரண்டு தெரிவுகள் இருந்தன.

ஒன்று மாநகர சபைக் கட்டளைச் சட்டத்தின் 42 ஏ பிரிவின் கீழ் இக்கடைகளை இடித்து அகற்றுதல்.

அடுத்தது முறையற்ற விதத்தில் காணிகளைப் பெற்று கட்டடத்தை அமைத்து மேலும் முறையற்ற விதத்தில் உப வாடகைக்கு வழங்கப்பட்ட கடைகளை சபை உடைமையாக்கி இறுதியாக கடை நடத்தி வந்தவர்களே அவற்றை விலை நிர்ணய திணைக்களத்தினால் நிர்ணயிக்கப்படும் வாடகைத் தொகையை செலுத்த உடன்படவும் அந்த நிர்ணயிக்கப்பட்ட மாத வாடகையின் பத்துவருடத்திற்குச் சமனான தொகையை பிறீமியமாக ஒரே தடவையில் செலுத்தவேண்டும் என்பது முறையாக்கல் ஆகும்.



இந்த இரண்டில் இரண்டாவது தெரிவே அமுல்படுத்தப்பட்டது. இந்த விடயங்கள் யாவும் மாநகர வருமானப் பகுதி அலுவலகர்களாலேயே கையாளப்பட்டன மட்டுமன்றி சகல தீர்மானங்களும் பதவிநிலை உத்தியோகத்தர்கள் யாவரும் கலந்து கொண்ட தீர்மானக் குழுக் கூட்டத்திலேயே முடிவு எடுக்கப்பட்டு அமுல்செய்யப்பட்டன.

றெமிடியஸ் அவரது வாதத்தின் போது கேள்விகள் கோரப்படாமலும் பணம் எதுவும் பெறப்படாமலும் இந்த முறையாக்கல் இடம்பெற்றதாகக் குற்றம் சாட்டியிருக்கிறார். முன்னாள் முதல்வருக்கு நான் எழுதிய 30.04.2011 ஆம் திகதிய கடிதத்திலேயே தீர்மானக் கூட்ட அறிக்கையைப் பார்வையிடுமாறும் இது ஒரு முறையாக்கல் நடவடிக்கை என்பதையும் சுட்டிக்காட்டி, இந்த ஆறு கடைகளையும் பெற்றவர்களிடமிருந்து சபை வருமானமாக 49 இலட்த்து 50 ஆயிரம் ரூபா தொகை அறவிடப்பட்டது பற்றியும் தெரிவித்திருந்தேன். இவற்றை எல்லாம் பரிசீலிக்கும் வாய்ப்பு அவர்கள் பதவி விலகிய காலம் வரை மட்டுமல்ல அண்மையில் தற்போதைய சபை வந்த பின்பும் எல்லா ஆவணங்களையும் பார்வையிடும் வாய்ப்பு வசதிகள் இருந்தும் இவ்வாறு திட்டமிட்ட குற்றச்சாட்டு முன்வைக்கப்படுகிறது.

இதற்கான காரணம் புரிந்து கொள்ளக்கூடியதுதான். இந்த ஆறு கடைக்காரர்களும் இந்தக் கட்டடத் தொகுதி அமைக்கப்படும் பொழுது தமக்கு முன்னுரிமை தரவேண்டும் என்று வாதாடியதும் அதற்கு யாழ்ப்பாண வணிகர் கழகம் ஆதரவு தெரிவித்தமையும் அதனால் இவர்களின் ஆறு கடைகளை வேறு நபர்களுக்கு வழங்கி கோடிக் கணக்கான ரூபாக்களைத் தாம் பெற்றுக் கொள்ள முடியாமல் போனமையே காரணமாகும்.

கட்டடம் சம்பந்தமாக என்னால் யாழ்ப்பாண நீதிமன்றில் தாக்கல் செய்யப்பட்ட வழக்கு இலக்கம் 1443/2011 விசாரணைக்கு எடுக்கப்பட்ட கடைசி நாளில் எமது சட்டத்தரணி வெளிநாடு சென்றிருந்தமையினால் சமுகமளிக்க முடியாமை பற்றி நானே நேரடியாக நீதிபதியின் கவனத்திற்குக் கொண்டு வந்து வேறொரு தவணை வழங்குமாறு கோரினேன். ஆனால் அந்தக் கோரிக்கையை நிராகரித்து இந்த வழக்கை விசாரணை எதுவுமின்றி நீதிபதி தள்ளுபடி செய்திருந்தார். அன்றைய தினம் மேல் நீதிமன்ற நீதிபதியாக இருந்த விக்னராஜா ஆளுநர் சார்பாக சட்டத்தரணியாக ஆஜராகியிருந்தார்.

இந்த வழக்கில் எனது சட்டத்தரணியின் புறொக்ஸியை மாற்றி அமைக்கும் உரிமை கொண்ட நான் தவணை கேட்டும் எனது புறொக்ஸி வராத காரணத்தைக் காட்டி நீதிபதி வழக்கை தள்ளுபடி செய்தது அடிப்படை நீதியியலுக்கு மாறானது என்றும் இவ்வாறான தீர்ப்புகளினால் மக்கள் நீதித்துறையில் அவநம்பிக்கை கொள்ள சந்தர்ப்பங்கள் ஏற்படுகின்றன என்று விக்னராஜாவிடம் நான் கூறியதும் எனக்கு நல்ல ஞாபகம் இருக்கிறது.

நான் ஒப்பந்தங்களில் ஒப்பமிட்டது தவறென்று சட்டத்தரணி றெமிடியஸ் லாவகமாக தனக்கே உரிய பாணியில் வாதத்தை முன்வைத்தார்.

நான் எந்த முதல்வர் சார்பிலும் எந்த இடத்திலும் ஒப்பமிடவில்லை என்பதை அவரே ஒரு கட்டத்தில் குறிப்பிட்டிருக்கிறார். ஒரு நியமமான படிவத்தில் பொருத்தமற்ற விடயங்களை கீறிவிடுவது வழமை. மேலும் மாநகர சபை கட்டளைச் சட்டத்தின் 286 ஏ பிரிவின் கீழ் மேயர் ஒருவர் பதவி வகிக்காத நிலையில் மாநகர ஆணையாளர் சபையினதும் முதல்வரதும் பிரதி முதல்வரதும் அதிகாரங்களைப் பிரயோகிக்கலாம். ஆகவே எம்மால் மேற்கொள்ளப்பட்ட எல்லா நடவடிக்கைகளும் சட்டபூர்வமானவை என்பதை வலியுறுத்த விரும்புகிறேன்.

இவ்வாறு நான் ஒப்பமிட்டது தவறு என்று இவர் கூறுகையில், மாநகர ஆணையாளராக இருந்த பிரணவநாதன் முதலமைச்சருக்குத் தெளிவுபடுத்தல் கோரி கடிதம் அனுப்பியது தேவையற்றது என்று பட்டியல் உறுப்பினர் திருமதி யோகேஸ்வரி சற்குணராஜா கூறுகிறார். இவர்கள் இருவருமே சந்தர்ப்பத்திற்கு ஏற்றவாறு பேசியிருப்பது இதன் மூலம் தெளிவாகிறது.

விசாரணைக் குழு அமைத்தலுக்கு முதலமைச்சருக்கு அதிகாரம் இல்லை என்ற வாதத்தை இவர்கள் முன்வைத்திருக்கிறார்கள். 1989 ஆம் ஆண்டின் 12 ஆம் இலக்க மாகாண சபை திருத்தச் சட்டத்தின் மூலம் மத்திய உள்ளூராட்சி அமைச்சரின் அதிகாரங்கள் யாவற்றையும் மாகாண உள்ளூராட்சி அமைச்சர் பிரயோகிக்க முடியும் என்றுள்ளது. எனவே அரசமைப்பு மூலம் மாகாண சபைகளுக்கு உரித்தாக்கப்பட்ட அதிகாரங்கள் அடிப்படையில் மாநகர சபை கட்டளைச் சட்டத்தின் மத்திய கட்டுப்பாடு ஏற்பாடுகளுக்கு அமைய குழுக்களை நியமிக்கவும், விசாரணை செய்யவும் உள்ளூராட்சி அமைச்சர் என்ற வகையில் முதலமைச்சருக்கு முழு அதிகாரமும் இருந்தது.

விசாரணை அறிக்கைகள் மூலம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் என்ற தீர்மானம் மாகாண சபையிலேயே வலியுறுத் தப்பட்டதன் அடிப்படையிலேயே எனது தல்லமையில் ஐவர் கொண்ட குழு நியமிக்கப்பட்டது.

இந்தக் குழு பற்றி யாழ். மாநகர சபையில் பேசப்படுகின்ற எல்லாச் சந்தர்ப்பத்திலும் ஏதோ எனது தனி அறிக்கை போல அங்கு பேசப்பட்டமை இவர்களது காழ்ப்புணர்ச்சியின் வெளிப்பாடு ஆகும்.

இந்தக் கட்டட அமைப்புக்கான விண்ணப்பங்களை கோருகின்ற போது தனி ஒருவர் மட்டும் விண்ணப்பித்த பொழுது மீள் விண்ணப்பங்கள் கோரப்பட வேண்டும் என்ற வாதம் சபையில் முன்வைக்கப்பட்ட போது தாங்கள் ஏதோ பெரிய தமிழ் தேசிய வாதிகள் போன்று காட்டி தமிழருக்கு கொடுப்பதே தமது கொள்கையாகும் என்று உரத்துக் கூறினர். இது ஒரு வேடிக்கையான கூற்று. இவர்கள் வெளியிட்ட விளம்பரங்கள் தமிழ், சிங்களம், ஆங்கிலம் ஆகிய மொழிகளில் தென்னிலங்கையிலிருந்து வெளிவரும் பத்திரிகைகளில் மட்டுமே வெளியிடப்பட்டன.

தமிழருக்குக் கொடுக்கப்பட வேண்டும் என்றால் ஏன் சிங்களப் பத்திரிகையில் வெளியிட வேண்டும். மேலும் இந்தத் தகவல் ஏன் உள்ளூர்ப் பத்திரிகைகளில் வெளியிடவில்லை என்ற கேள்வியும் எழுகின்றது.

குறிப்பாக இந்த விட்யத்தில் மாநகர சபை கட்டளைச் சட்டத்தின் 212 ஆவது பிரிவின் ஏற்பாடுகளின் படி வரவு செலவுத் திட்ட அறிவித்தல் மாநகர பிரதேசத்தில் விநியோகிக்கப்படும் இரண்டு அல்லது அதற்கு மேற்பட்ட பத்திரிகைகளில் அறிவித்தல் வெளியிடப்பட வேண்டும் என்றுகூறப்பட்டிருப்பது கவனத்தில் கொள்ள வேண்டும்.

அடுத்து மிக முக்கியமாக இந்த முதலீட்டாளர் தம்மை 03.10.2010 முதலில் சந்தித்துப் பேசினார் என திருமதி பற்குணராஜா குறிப்பிடுகின்றார். இதனைத் தொடர்ந்தே எல்லா நடவடிக்கைகளும் இடம்பெற்றிருக்கின்றன என்பது தெளிவு.

இந்த சிபார்சு அறிக்கையில் குறிப்பிடப்பட்ட 4 கோடி 50 இலட்சம் ரூபா நிலையான வைப்பு என்று சபையின் கணக்காளரால் தரப்பட்ட தரவு. இதில் குறிப்பிட்ட தேவைகளுக்கு ஒதுக்கப்பட்ட நிதிகள் உள்ளடக்கப்படவில்லை.

4 கோடி 50 இலட்சம் ரூபா வீதி அபிவிருத்திக்குச் செலவழித்தாகக் கூறுகின்றனர். இது பொய்யான தகவல் ஆகும்.

(10 பக்கம் பார்க்க)



# இந்திய அணியை துரத்தியடித்தார் மக்ஸ்வெல்!

## ஆஸி. வசமானது ரி - 20 தொடர்

இந்திய அணி நிர்ணயித்த கடின இலக்கை மக்ஸ்வெலின் அதிரடி சதத் தால் துரத்தி அடித்த ஆஸ்திரேலியா, ரி - 20 - தொடரை முழுமையாகக் கைப்பற்றியது.

சொந்த மண்ணில் இந்திய அணி ரி20 தொடரைப் பறிகொடுத்தது.

இந்தியாவுக்குச் சுற்றுப்பயணம் மேற்கொண்டுள்ள ஆஸ்திரேலிய இரண்டு போட்டிகள் கொண்ட ரி20 தொடர் மற்றும் 5 ஒருநாள் போட்டிகள் தொடரில் விளையாடுகின்றது. இதில் முதலாவது ரி20 போட்டியில் ஆஸ்திரேலியா அணி வெற்றிபெற்று தொடரில் முன்னிலை பெற்றது.

இந்த நிலையில் இரண்டாவதும் இறுதியுமான போட்டி புதன் இரவு பெங்களூரில் இடம்பெற்றது.

இப்போட்டியில் நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்ற ஆஸ்திரேலிய அணி களத் தடுப்பை தேர்வு செய்தது.

முதலாவதாக ஆடுகளம் நுழைந்து துடுப்பெடுத்தாடிய இந்திய அணி கோஹ்லி - டோனி ஜோடியின் அதிரடியால் 20 ஓவர்கள் நிறைவில் 4 விக் கெட்டுக்களை இழந்து 190 ஓட்டங் களைக் குவித்தது.

துடுப்பாட்டத்தில் அணித் தலைவர் விராட் கோஹ்லி 38 பந்துகளில் 70 ஓட்டங் களை ஆட்டமிழக்காமல் பெற்றார். அத்துடன், கே.எல். ராகுல் 47 ஓட்டங்களையும் டோனி 40 ஓட்டங்களையும் எடுத்தனர்.

191 ஓட்டங்கள் என்ற வெற்றியிலக்கை நோக்கி துடுப்பெடுத்தாட ஆரம்பித்த ஆஸ்திரேலிய அணியின் முதல் இரண்டு விக்கெட்டுக்களும் 22 ஓட்டங்களில் அடுத்தடுத்து சரிந்தமையினால் அரங்கத்தில் ரசிகர்களின் ஆரவாரம் அதிகரித்தது.

எனினும் அந்த ஆரவாரத்தை மக்ஸ் வெல் தனது அதிரடி சதத்தால் அடக்கி னார். ஆஸ்திரேலியா அணி 19.4 ஓவர்க ளில் 3 விக்கெட்டுக்களை மாத்திரமிழந்து 194 ஓட்டங்களைக் குவித்து இலகு வான வெற்றியைப் பெற்றது.

இதன்மூலம் இரண்டு போட்டிகள் கொண்ட ரி20 தொடரை ஆஸ்திரேலிய அணி 2:0 என்ற கணக்கில் முழுமையாக சுவீகரித்து இந்தியாவுக்கு அதன் சொந்த மண்ணில் வெள்ளையடித்தது.

ஆஸ்திரேலிய அணி சார்பாக மக்ஸ் வெல் 55 பந்துகளில் 9 சிக்ஸர்கள், 7 பவுண் டரிகள் அடங்கலாக 113 ஓட்டங்களை ஆட்டமிழக்காமல் பெற்றார். (ஐ)

# யோகேஸ்வரியின்...

(09 ஆம் பக்கத் தொடர்ச்சி)

உண்மையில் அங்கீகரிக்கப்பட்ட ஆளணிக்கு மேலாக 430 பேரை நியமனம் செய்து மாதாந்தம் ரூபா 6 கோடி ரூபா வரை செலவு செய்து, வருடாந்தம் 7 கோடி 20 இலட்சம் ரூபா இருப்பது பற்றி 25.04.2011 ஆம் திகதி ஆளுநர் சந்திரசிறிக்கும் நாம் எழுதியிருப்பதும் சுட்டிக்காட்டப்படக்கூடியது.

மிக மோசமான விடயமாக முழுச் சபையையும் உதாசீனம் செய்து முழு அதிகாரத்தையும் மாநகர முதல்வராகிய தனக்கே வழங்கவேண்டும் என்ற பிரேரணையை தானே முன்மொழிந்து மாநகர சபை கட்டளைச் சட்டத்தின் 28 ஆம் பிரிவு, 32 ஆம் பிரிவு என்பனவற்றை மீறும் செயலாகும். எனவே இந்த அதிகாரக் கையளிப்பு சட்டத்திற்கு முரணனானது என்பதும் விசாரணைக்குழுக்களால் சுட்டிக்காட்டப் பட்டிருக்கின்றது. சட்டபூர்வ அதிகாரம் இல்லாத ஒருவரால் கையொப்பம் இட்ட ஒப்பந்தம் இயல்பாக சட்டவலுவற்றது என்பது சகல விசாரணைகளதும் முடிவாகும்.

மேலும் மாநகர சபை சட்டத்தின் 229 ஆவது பிரிவின் கீழ் கோரப்படுகின்ற எல்லாக் கேள்விக் கோரிக்கைளும் சபையின் அங்கீகாரத்துக்காக சமர்ப்பிக்கப்பட வேண்டும். ஆனால் இங்கு அவ்வாறு செய்யப்படவில்லை.

மாநகர சபை கட்டளைச் சட்டத்தின் 28 ஆம் பிரிவின் அடிப்படையில் நிதி சார்ந்த விடயங்கள் நிதிக்குழு ஊடாக சபைக்கு சமர்ப்பிக்க வேண்டும் என்று இருக்கையில் இந்த ஏற்பாடு சபையின் நிதி அல்லது அரசு நிதிக்கு மட்டும் பொருந்தும் என்ற இவர்களது வாதம் தவறானது. அப்படி எதுவும் இந்த ஏற்பாட்டில் இல்லை.

இந்தவிடயத்தில் அரசகணக்காய்வுத்திணைக்களம் யாழ்ப்பாண மாநகர முதல்வருக்கு எழுதிய 2017 ஆம் ஆண்டுக்கான அறிக்கையில் அதன் பந்தி 4:3 சர்ச்சைக்குரிய தன்மையிலான கொடுக்கல் வாங்கல் என்ற தலைப்பில் இந்த விடயம் பற்றி கேள்வி எழுப்பி சபையின் அனுமதியின்றி சபைக்கு உரித்தான 7.29 பரப்பு விஸ்தீரணமுடைய வண்ணான்குளம் காணி ஒன்று ஒப்பந்தக்காரர் ஒருவருக்கு வழங்கப் பட்டமை தொடர்பில் கேள்வி எழுப்பியுள்ளது.

இதேபோல 2017 ஆம் ஆண்டுக்கான வட மாகாண சபைக்கான கணக்காய்வு அறிக்கையின் பந்தி 6:10:5 (பி) பந்தியிலும் இந்த விடயம் தொடர்பாக கேள்வி எழுப்பப்பட்டுள்ளது என்பது முக்கியமாகும்.

கஸ்தூரியார் வீதி ஆறு கடைகளை நான் முறையாக்கியதை தவறு என்று கூறி சபையை தவறாகத் தொடர்ந்து வழிநடத்தி விடயத்தை திசை திருப்ப முற்பட்டு உள்ளனர்.

அந்த 6 கடைகளில் இருந்தும் தமக்குக் கிடைக்க வேண்டிய கோடிக்கணக்கான தரகுப் பணம் கிடைக்கவில்லை என்பதே இவர்களது ஆதங்கம்.

அதேநேரம் என்னுடைய செயற்பாடுகள் தவறானதாக இருக்குமானால் கணக்காய்வுத் திணைக்களம் கேள்வி எழுப்பியிருக்கும். அவ்வாறு எதுவும் நிகழவில்லை.

காலத்திற்குக் காலம் திருமதி யோகேஸ்வரி பற்குணராஜா தமது பல்வேறு மோசடிகளையும் ஊழல்களையும் மறைப்பதற்கே என் மீது அபாண்டமான குற்றச்சாட்டுக்களைச் சாட்டி வருவதும் அனைவருக்கும் தெரிந்ததே. திரு றெமிடியஸும் அதற்கு வக்காலத்து வாங்குவது வழக்கமானதே. எமது இந்தத் தெளிவுபடுத்தல் மூலம் மக்கள் உண்மை நிலையை தெரிந்து கொள்வார்கள் என்று நம்புகின்றேன் - என்றார். (ஐ)



# வாய்ப்பு தாருங்கள்! ரஹானே கோரிக்கை

ரஹானே கடைசியாக பெப்ரவரி 2018 இல் ஒருநாள் கிரிக்கெட்டில் இடம்பெற்றார். அதன்பிறகு அவருக்குத் தகுந்த வாய்ப்புகள் அளிக்கப்படவில்லை. ஆனால், சமீபகாலமாக அவர் இந்திய டெஸ்ட் அணியில் மட்டுமே தொடர்ச்சியாக இடம்பெற்று வருகிறார். இதனால் உலகக் கிண்ண அணியில் ரஹானே இடம்பெறுவது இன்றைய நிலையில் சாத்தியமில்லை.

ஆங்கில நாளிதழ் ஒன்றுக்கு ரஹானே அளித்த பேட்டியில் கூறியவை வருமாறு: -

எனக்கு எப்போதும் அணிதான் முக்கியம். எனவே அணி நிர்வாகம் மற்றும் தேர்வுக்குழுவின் முடிவுகளை மதிக்கிறேன். எனினும் கடைசியில் உங்களுடைய பங்களிப்பு மதிப்பளிக்கப்பட வேண்டும்.

ஒரு வீரராக நான் அணியின் நலனைக் கருத்தில் கொண்டுதான் விளையாடியுள்ளேன். எனவே தொடர்ச்சியான வாய்ப்புகள் கிடைக்க நான் தகுதியுடையவன். குறைந்தபட்சம் அதைத்தான் நான் கேட்கிறேன். கடந்த மூன்று நான்கு தொடர்களாக என்னுடைய துடுப்பாட்ட சராசரி 45 முதல் 50 இருக்கும். என்னை அணியிலிருந்து நீக்கிய பிறகு உள்ளூர் போட்டிகளிலும் நன்றாகவே விளையாடினேன். ஒரு துடுப்பாட்ட வீரனாக நான் அதிரடியாக விளையாடக் கூடியவன். ஆனால் தனிப் பட்டமுறையில் நான் கூச்ச சுபாவம் உடையவன். என்னுடைய துடுப்பு தான் பேசவேண்டும் என நினைப்பேன். ஆனால் சில நேரங் களில் உண்மையையும் பேசியாகவேண்டும். உலகக் கிண்ணத் திட்டங்களில் என் பெயரும் இருப்பதாகத் தேர்வுக்குழுத் தலைவர் கூறியுள்ளார். நல்லது. ஆனால் எனக்கு வாய்ப்புகள் அளிக்கப்படவேண்டும். உலகக் கிண்ண அணியில் இடம்பிடிப்பேன் என நம்பிக்கையாக உள்ளேன் - என்றார்.

# கெய்ல் போன்று சிக்சர்கள் விளாச என்னால் முடியாது



இங்கிலாந்து கிரிக்கெட் அணியின் நம்பிக்கை நட்சத்திரமான ஜோ ரூட், மேற்கிந்திய தீவுகள் அணி வீரர் கிறிஸ் கெய்ல் போன்று சிக்சர்கள் விளாச முடியாது என்றாலும், தன்னால் விரைவாக ஓட்டங்களைக் குவிக்க முடியும் என்று தெரிவித்துள்ளார்.

இங்கிலாந்து கிரிக்கெட் அணியில் தூண் போல நின்று விளையாடும் வீரர் ஜோ ரூட் மேற்கிந்திய தீவுகள் அணிக்கு எதிரான முதல் ஒருநாள் போட்டியில், 361 ஓட்டங்கள் வெற்றி இலக்கை அடையச் சதமடித்து வழிவகுத்தார்.

டெஸ்ட் மற்றும் ஒருநாள் போட்டியில் கலக்கி வரும் ஜோ ரூட், ரி 20 கிரிக்கெட்டில் அதிக அளவில் விளையாடியது கிடையாது. எனினும், சமீபத்தில் நடைபெற்ற பிக் பாஷ் லீக்கில் சில போட்டிகளில் விளையாடினார்.

இந்நிலையில், கிறிஸ் கெய்ல் போன்று என்னால் சிக்சர்கள் விளாச முடியாது. ஆனால், விரைவாக ஓட்டங் களைக் குவிக்க இயலும் என ஜோ ரூட் தெரிவித்துள்ளார்.

## மஹிந்தவை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
கப்பட்டுள்ளது.

நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதி முறையை இல்லாது செய்கின்றமையை ஆதரிப்பேன் என மஹிந்த சுட்டிக் காட்டியுள்ளார். (ஐ)

## 850 தமிழ்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
என்று வடக்கு மாகாண சிறப்பு மூத்த பொலிஸ் அத்தியட்சகர் கணேசநாதன் தெரிவித்தார்.

யாழ்ப்பாண மாவட்ட சிவில் பாதுகாப்புக் குழுக் கூட்டம் நேற்று யாழ். மாவட்ட செயலகத்தில் நடைபெற்றது. இதில் கலந்து கொண்டு கருத்து வெளியிடும் போதே அவர் இதனைக் கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் –

வடக்கு மாகாணத்தில் 850 தமிழ் இளையோர்கள் இணைக்கப்படவுள்ளனர். 18 வயதுக்கு 28 வயதுக்கு இடைப்பட்ட 5 அடி 4 அங்குலம் உயரமுடைய இளைஞர், இளைஞர்கள் பொலிஸ் சேவைக்குள் இணைய முன்வரவேண்டும்.

இலங்கையின் சனத்தொகை 2 கோடியே 30 லட்சமாகும். இவர்களின் பாதுகாப்பை உறுதிப்படுத்த வெறுமனே 85 ஆயிரம் பொலிஸாரும், 10 ஆயிரம் சிறப்பு அதிரடிப் படையினருமே உள்ளனர்.

இதனால் மேலதிக பொலிஸார் எமக்கு தேவையாக உள்ளார்கள். நாளை (இன்று) வடக்கு மாகாண ஆளுநர் சுரேன் ராகவனுடன் இணைந்து பொலிஸ் மா அதிபரை நான் சந்திக்க உள்ளேன். அவரிடம் இவ்விடயம் தொடர்பில் பேச உள்ளோம் – என்றார். (ஐ-07)

## இலங்கை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
இதன்போது இலங்கை அரசை நீதிப் பொறிமுறையில் இருந்து தப்பிப்பதற்கு இடமளிக்கக்கூடாது எனக் கோரும் மனு, ஐக்கிய நாடுகள் சபைக்கு அனுப்பிவைக்கப்படுவதற்காக மனித உரிமைகள் செயற்பாட்டாளர் அருட்தந்தை ஜெயபாலம் குரூஸ் அடிகளாரிடம் கையளிக்கப்பட்டது.

மன்னார் மாவட்ட காணாமல் ஆக்கப்பட்ட உறவுகளை தேடும் குடும்பங்களின் சங்கத்தின் ஏற்பாட்டில் இந்த ஆர்ப்பாட்டம் முன்னெடுக்கப்பட்டது.

இதன்போது ஆர்ப்பாட்டப் பேரணியொன்றும் இடம்பெற்றது. மன்னார் அரச பஸ் தரிப்பிடத்திலிருந்து ஆரம்பமாகிய பேரணி, மன்னார் மனிதப் புதைகுழி அகழ்வுப் பணிகள் இடம்பெறும் பகுதியை வந்தடைந்தது. அங்கு உறவினர்கள் பல்வேறு கோஷங்களை எழுப்பி ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

அங்கிருந்து மீண்டும் பேரணியாகச் சென்றவர்கள் மன்னார் மாவட்ட செயலகத்தின் முன்னால் ஒன்றுகூடி மீண்டும் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர். இதன்போது, இலங்கை அரசுக்கு ஐ.நா. கால அவகாசம் கொடுக்கக்கூடாது, இலங்கை அரசை நீதிப் பொறிமுறையில் இருந்து தப்ப வைக்கக்கூடாது என்பன போன்ற கோரிக்கைகளை அவர்கள் முன்வைத்தனர்.

கைது செய்யப்பட்டு தடுத்து வைக்கப்பட்டுள்ள அரசியல் கைதிகளை விடுதலை செய்யவேண்டும், மன்னார் மனித புதைகுழியில் புதைக்கப்பட்டவர்கள் யார்?, புதைத்தவர்கள் யார்? போன்ற கேள்விகளுக்கு அரசு விடையளிக்கவேண்டும் என்றும் அவர்கள் வலியுறுத்தினர். (ஐ)

## பாகிஸ்தான்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
பாகிஸ்தான் ஆக்கிரமிப்பு காஷ்மீரில் உள்ள பயங்கரவாத முகாமை இந்திய விமானப்படை தாக்கி அழித்தமைக்குப் பதிலடியாக பாகிஸ்தான் நேற்று முன்தினம் தாக்குதல் நடத்தியது.

அதற்குப் பதிலடி கொடுக்கும் வகையில் இந்திய விமானப்படையும் பதிலடி கொடுத்தது.

இந்தத் தாக்குதல் நடவடிக்கையின்போது இந்தியப் போர் விமானங்களை இரண்டை பாகிஸ்தான் இராணுவம் சுட்டு வீழ்த்தியது.

இதன்போது ஒரு விமானி உயிரிழக்க மற்றொரு விமானியான விங் கொமாண்டர் அபிநந்தனை பாகிஸ்தான் இராணுவம் கைது செய்திருந்தது.

இந்திய விமானி தங்கள் வசம் இருப்பதாக பாகிஸ்தான் வீடியோ ஆதாரத்தை வெளியிட்டது.

அபினந்தனை விடுவிப்பதற்காக இந்தியா இராஜாங்க ரீதியாக தீவிர முயற்சி மேற்கொண்டுள்ளது. ஜெனீவா ஒப்பந்தத்தின்படி, அபினந்தனைப் பத்திரமாக இந்தியாவிடம் ஒப்படைக்கவேண்டும் என அது வலியுறுத்தி வருகின்றது. அமெரிக்கா, பிரான்ஸ், ஜப்பான், சவூதி அரேபியா போன்ற நாடுகள் மூலம் அழுத்தம் கொடுத்து வருகின்றது.

இதற்கிடையே, அபினந்தன் விவகாரம் பற்றி ஓரிரு நாளில் முடிவு எடுக்கப்படும் எனப் பாகிஸ்தான் வெளியுறவுத்துறை அமைச்சகம் கூறியுள்ளது.

இந்நிலையில், நல்லெண்ண அடிப்படையில் இந்திய விமானி அபினந்தன் இன்று விடுவிக்கப் படுகிறார் என பாகிஸ்தான் பிரதமர் இம்ரான்கான் தெரிவித்தார்.

இது தொடர்பாக, பாகிஸ்தான் நாடாளுமன்றத்தில் பேசிய பிரதமர் இம்ரான்கான், அமைதியை விரும்பும் நல்லெண்ண அடிப்படையில் இந்திய விமானி அபினந்தன் இன்று விடுவிக்கப்படுகிறார் என அறிவித்துள்ளார். (ஐ)

## ரவிராஜ்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
உத்தியோகஸ்தர் லியனாராச்சிகே அபயரத்ன தெரிவித்துள்ளார்.

இந்தத் தொகை கருணா தரப்பினருக்கு முன்னாள் பாதுகாப்புச் செயலாளர் கோட்டபாய ராஜபக்ஷவால் வழங்கப்பட்டது என்றும் அவர் கூறியுள்ளார்.

ரவிராஜ் கொலை சம்பந்தமான வழக்கு விசாரணை நேற்று கொழும்பு மேலதிக நீதவான் திலின கமகே முன்னிலையில் நடைபெற்றது.

இதன் போது சிரேஷ்ட அரச சட்டத்தரணி டிலான் ரத்நாயக்கவின் நெறிப்படுத்தலில் அபயரத்ன சாட்சியமளித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் –

இந்தக்கொலையானது கடந்த அரசின் சூழ்ச்சியால் நடைபெற்றது. அதற்கான பணம் பாதுகாப்பு அமைச்சின் வசந்த என்பவர் ஊடாக கருணா தரப்புக்கு வழங்கப்பட்டது.

அத்துடன் இந்த கொலையானது பிரதிப் பொலிஸ் மா அதிபர் கீர்த்தி கஜநாயக்க, அரச புலனாய்வுச் சேவையின் சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் டூல் மற்றும் கருணா தரப்பு தெரிந்தே மேற்கொண்டது.

கொலை நடந்த பின்னர், கருணா தரப்புக்கு 5 கோடி ரூபா வழங்கப்பட்டதுஎன கொலையுடன் சம்பந்தப்பட்ட கருணா தரப்பை சேர்ந்தவர்கள் என்னிடம் கூறினார்கள் – என்றார்.

வழக்கு விசாரணைகளை எதிர்வரும் 2ஆம் திகதிக்கு ஒத்திவைத்த பதில் நீதவான், அதுவரை சந்தேக நபர்களை விளக்கமறியலில் வைக்குமாறு உத்தரவிட்டார்.

இதேவேளை, ரவிராஜ் கொலை செய்யப்படுவதை நேரில் பார்த்த 4 ஆம் இலக்கச் சாட்சியாளரான ஹென்ஜலோ ரோய் என்பவரை எதிர்வரும் 2 ஆம் திகதி நீதிமன்றத்தில் ஆஜராகுமாறும் நீதவான் உத்தரட்டார். (ஐ)

## தமிழீழக்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
என்று அமைச்சர் சம்பிக்க ரணவக்க தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் –

நனவாகாதகனவைஎண்ணிக் கொண்டு சந்தர்ப்பங்களை தவறவிடாது நாம் அனைவரும் ஒரு நாட்டுக்குள் ஒற்றுமையாக வாழக்கூடிய சூழலை உருவாக்க வேண்டும். வடக்கு மக்களுக்கு அபிவிருத்திக்கான பாதையை உருவாக்கிக் கொடுத்து அவர்களின் கஷ்டங்களில் பங்கெடுத்து அவர்களுக்கான வேலைவாய்ப் புகளை உருவாக்கிக் கொடுக்க வேண்டிய கடமை எமக்கு உள்ளது.

யுத்தத்தில் குற்றங்கள் இடம் பெற்றமை மறைக்கப்படவேண்டிய ஒன்றல்ல, ஆனால் அவை எதுவுமே திட்டமிட்ட அழிப்பு அல்ல. போர்க்குற்றச்சாட்டில் இராணுவத்தைத் தண்டிக்க வேண்டுமென்றால் அதே குற்றங்களில் விடுதலைப் புலிகளையும், இந்திய அமைதிப்படையையும் ஏனைய தரப்புகளையும் தண்டிக்க வேண்டும். ஆகவே உண்மைகளை கண்டறிவது விடுத்து தீர்வுகளை நோக்கி பயணிப்போம் – என்றார். (ஐ)

## அநீதிகளுக்கு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
செப்ரெம்பர் 11 தாக்குதலுக்கு முன்னதாகவே இந்துக்களான விடுதலைப் புலிகள் வீரியமான தற்கொலை தாக்குதல் முறைமையைப் பயன்படுத்தி இருக்கின்றார்கள் எனவும் அவர் சுட்டிக் காட்டினார்.

பாகிஸ்தானில் சிறைப்பட்டு இருக்கும் இந்திய விமானி அபிநந்தனை இன்று விடுதலை செய்வதாக பாகிஸ்தான் நாடாளுமன்றத்தில் பிரதமர் இம்ரான் கான் நேற்று முக்கிய அறிவிப்பை வெளியிட்டார். இதன்போது ஆற்றிய உரையிலேயே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் –

இஸ்லாமிய தீவிரவாதிகள் தான் தற்கொலைத் தாக்குதல்களை மேற்கொள்வதாக இந்தியா தொடர்ச்சியாகக் குற்றஞ்சாட்டி வருகின்றது. தீவிரவாதத்துக்கு மதம் கிடையாது. தற்கொலைத் தாக்குதல்கள் மதத்தின் பெயரால் நடப்பது இல்லை. அமெரிக்காவின் இரட்டைக் கோபுரத் தாக்குதலுக்கு முன்னதாகவே உலக அளவில் வீரியமான தற்கொலைத் தாக்குதல்களை விடுதலை புலிகள் நடத்தியிருந்தனர்.

விடுதலைப் புலிகள் சார்பில் தற்கொலை தாக்குதல் நடத்தியவர்கள் அனைவருமே இந்துக்கள். அவர்கள் மதத்தின் பெயரால் நடத்தவில்லை. மாறாக தங்களது விரக்தி மற்றும் கோபத்தின் விளைவாகவே அதனை செய்தனர் – என்றார்.

பாகிஸ்தான் வரலாற்றில் இம்ரான் கானின் நேற்றைய நாடாளுமன்ற உரை வரலாற்று முக்கியத்துவம் மிக்க ஒன்றாக சர்வதேச ரீதியில் பார்க்கப்படுகின்றது. (ஐ)

## பொறுப்புக்கூறும்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
போம், மன்னிப்போம் என்றெல்லாம் 'சொல்வித்தை'க் காட்டி இனியும் காலத்தை இழுத்தடிக்காமல் பொறுப்புக்கூறும் பொறிமுறைக்கு அரசு உயிர்கொடுக்க வேண்டும்."

– இவ்வாறு ஜனநாயக மக்கள் முன்னணியின் பிரதித் தலைவரும், தமிழ் முற்போக்குக் கூட்டணியின் எம்.பியுமான வேலுகுமார் வலியுறுத்தினார்.

கம்பளையில் நடைபெற்ற அரசியல் நிகழ்வொன்றில் கலந்து கொண்டிருந்த வேலுகுமார் எம்.பியிடம், காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவினர்களால் வடக்கில் முன்னெடுக்கப்பட்டு வரும் போராட்டங்கள் தொடர்பில் ஊடகவியலாளர்கள் கேள்விகளை எழுப்பினர்.

இவற்றுக்கு பதிலளிக்கையிலேயே வேலுகுமார் எம்.பி. மேற்கண்டவாறு வலியுறுத்தினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் –

வலிந்துகாணாமல் ஆக்கப்பட்ட தமது சொந்தங்களுக்கு என்ன நடந்தது என்று தெரியாமல் அவர்களின் உறவினர்கள் தினமும் விழிநீர் வடிப்பதுடன் என்றாவது ஒருநாள் திரும்பிவருவார்கள் என்ற நம்பிக்கையில்தான் வலிகளை சுமந்தப்படி வாழ்கின்றனர். இருந்தும் ஏக்கத்துடன் முடியும் பொழுதுகள் ஏமாற்றத்துடனேயே விடிகின்றன.

தனது தந்தையின் வருகைக்காகக் காத்திருக்கும் பிள்ளைகளுக்கும், கொள்ளிவைக்க மகன் வருவான் என ஏங்கித்தவிக்கும் பெற்றோருக்கும் அரசு கூறும் பதில் தான் என்ன?

படையினரிடம் சரணடைந்தவர்கள், ஒப்படைக்கப்பட்டவர்கள், விசாரணைகளுக்காக அழைத்துச் செல்லப்பட்டவர்கள் என ஆயிரக்கணக்கானவர்கள் காணாமல் ஆக்கப்பட்டுள்ளனர் என்று நல்லிணக்க ஆணைக்குழு முன்னிலையிலும், பரணகம ஆணைக்குழு முன்னிலையிலும், காணாமல் ஆக்கப்பட்டோர் தொடர்பான பணியகத்திடமும் மக்கள் சாட்சியங்களை வழங்கியுள்ளனர்.

உறவுகளை இழந்தவர்கள், தொலைத்தவர்களுக்குதான் அதன் வலி என்னவென்று புரியும். இவ்வாறு போரால் பாதிக்கப்பட்ட மக்களின மன வலியை 'மறப்போம், மன்னிப்போம்' என்ற வார்த்தையால் மட்டும் குணமாக்கிவிடமுடியாது. எதையும் மறக்கமுடியாது. மறக்கவும் கூடாது. மன்னிப்பு என்பது பாதிக்கப்பட்டவர்களின் மன நிலையை பொறுத்த விடயமாகும்.

அதேவேளை, போரால் பாதிக்கப்பட்ட மக்களின் கண்ணீர் துடைக்கப்படும், நிலையானதொரு நல்லிணக்கம் ஏற்படுத்தப்படும், பொறுப்புக்கூறும் கடப்பாடு நிறைவேற்றப்படும், தனக்கு வாக்களித்த தமிழ் மக்களை ஒருபோதும் கைவிடமாட்டேன் என அறிவிப்புகளை விடுத்த ஜனாதிபதி, இன்று அவை அனைத்தையும் மறந்து செயற்படுகின்றார்.

ஐ.நா. மனித உரிமைகள் பேரவையில் நிறைவேற்றப்பட்ட தீர்மானம் நடைமுறைப்படுத்துவதற்காக இலங்கையால் வழங்கப்பட்ட இணைஅனுசரணை மீளப்பெறப்படும் எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார். தான் நாட்டின் ஜனாதிபதி என்பதை மறந்து, கட்சி அரசியலையும், ஒருதரப்பை திருப்திபடுத்தும் கொள்கையையுமே அவர் முன்னெடுத்துவருகின்றார்.

சர்வதேச சமூகத்தையும், அதுசார்ந்த அமைப்புகளையும் தொடர்ச்சியாக ஏமாற்றமுடியாது. அவ்வாறு ஏமாற்ற முற்பட்டால் அதன் விளைவுகள் படுபயங்கரமானவையாக இருக்கும். தாமதித்து வழங்கப்படும் நீதிகூட மறுக்கப்பட்ட நீதிக்கு சமனானதாகும். எனவே, இனியும் இழுத்தடிப்பு செய்யாமல், போரால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு நீதியை பெற்றுக்கொடுப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படவேண்டும் – என்றார். (ஐ)

## மாகாண...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
பதியும் எதிர்க் கட்சித் தலைவருமான மஹிந்த ராஜபக்ஷ தெரிவித்தார்.

அரசுக்கு மாகாண சபைத் தேர்தல் மீதுள்ள பயமே அதனை ஒத்திவைப்பதற்குக் காரணம் எனவும் அவர் கூறினார்.

எல்பிட்டி பிரதேசத்தில் நேற்று மரண வீடொன்றுக்குச் சென்ற போது ஊடகங்களிடம் அவர் கருத்துத் தெரிவித்தார். இதன் போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

ஜனாதிபதித் தேர்தல் மாத்திரம் இந்த வருடத்தில் நிச்சயம் நடைபெறும் எனத் தான் எதிர்பார்க்கிறார் எனவும் அவர் மேலும் குறிப்பிட்டார். (ஐ)

## பிரதேச...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
அவர்கள் ஐந்து பேரையும் பிணையில் விடுவிக்க மல்லாகம் மாவட்ட நீதிபதி ஏ.ஜி.அலக்ஸ் ராஜா உத்தரவிட்டார்.

உடுவில் அம்பலவாணார் வீதியில் உள்ள வீடு ஒன்றுக்குள் கடந்த வியாழக்கிழமை இரவு 8.30 மணியளவில் புகுந்து 8 பேர் கொண்ட கும்பல் ஒன்று அடாவடியில் ஈடுபட்டது.

3 மோட்டார் சைக்கிள்களில் வந்த 8 பேர் கொண்ட கும்பல் ஒன்று வீட்டுப் படலையில் போடப்பட்டிருந்த பூட்டை உடைத்து உள்ளே நுழைந்து அங்கு யன்னல் கண்ணாடிகள் உட்பட பெறுமதியான பொருள்களை உடைத்து அடாவடியில் ஈடுப்பட்டுவிட்டுத் தப்பியது.

அந்தக் கும்பல் தப்பியவேளை வீதியில் விபத்து ஒன்றும் இடம் பெற்றது. அதிலிருந்து 8 பேரும் தப்பி ஓடினர்.

ஒரு வாரமாக சுன்னாகம் பொலிஸாரால் விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டனர்.

அதனடிப்படையில் வலி. தெற்கு பிரதேச சபையின் தமிழரசுக் கட்சி உறுப்பினர் அன்ரன் லீனஸ் உட்பட 5 பேர் சுன்னாகம் பொலிஸாரால் நேற்று முன்தினம் இரவு கைது செய்யப்பட்டனர். சந்தேகநபர்கள் 5 பேரும் உடுவில் மல்வத்தைச் சேர்ந்தவர்கள் என்று பொலிஸாரால் தெரிவிக்கப்பட்டது.

சந்தேகநபர்கள் நேற்று மாலை மல்லாகம் மாவட்ட நீதிபதி ஏ.ஜி.அலெக்ஸ்ராஜா முன்னிலையில் முற்படுத்தப்பட்டனர்.

வன்முறைச் சம்பவத்துக்கு திட்டமிடல் – ஒழுங்கமைத்தல் என பின்னணியில் இருந்த பிரதான சந்தேகநபர் பிரதேச சபை உறுப்பினர். அவரது பின்னணியில் 7 பேர் வன்முறையில் ஈடுபட்டனர். மேலும் மூவர் தேடப்படுகின்றனர் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

சந்தேகநபர்கள் சார்பில் முன்னிலையான சட்டத்தரணி பிணை விண்ணப்பதை முன்வைத்தார். சம்பவத்தில் எவருக்கும் காயம் ஏற்படவில்லை என்று சட்டத்தரணி கூறினார்.

வழக்கை விசாரணை செய்த மாவட்ட நீதிபதி, விசாரணைகளை துரிதமாக முன்னெடுக்க உத்தரவிட்டமையுடன், சந்தேகநபர்கள் ஐவரையும் பிணையில் விடுவித்தார்.


இதேவேளை, உடுவில் அம்பலவாணர் வீதியில் தொடர்ச்சியாக இடம்பெற்ற வாள்வெட்டு வன்முறைகளுக்கும் சந்தேகநபர்கள் ஆறு பேருக்கும் தொடர்புள்ளதா? என்பது தொடர்பில் விசாரணைகள் முன்னெடுக்கப்படுகின்றன எனவும் சுன்னாகம் பொலிஸார் தெரிவித்தனர். (ஐ)

# இலங்கை வரலாற்றில் முதல் முறையாக சொத்து விவரம் வெளியிட்ட எம்.பிக்கள்!

கொழும்பு, மார்ச் 01

பல்வேறு கட்சிகளைச் சேர்ந்த 5 நாடாளுமன்ற உறுப்பினர்கள் தமது சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் பற்றிய விவரங்களைப் பொது வெளியில் வெளிப்படுத்துவதற்குத் தன்னிச்சையாக முன்வந்துள்ளனர்.

நாடாளுமன்ற உறுப்பினர்கள் தாரக பாலசூரிய, வாசுதேவ நாணயக்கார, எம்.ஏ. சுமந்திரன், விதுர விக்கிரமநாயக்க மற்றும் அமைச்சர் எரான் விக்கிரமரத்ன ஆகியவர்களே இவ்வாறு நாட்டின் அரசியல் கலாசாரத்தை மாற்றுவதற்காக முன்வந்துள்ளனர்.



ட்ரான்ஸ்பரன்சி இன்டர்நஷனல் கடந்த பல ஆண்டுகளாகச் சொத்துக்கள் பற்றிய விவரங்களைப் பொது வெளியில் கொண்டுவருவதற்கான பிரசாரங்களை மேற்கொண்டது. பிரதிநிதிகளின் வெளிப்படைத்தன்மையையும் பொறுப்புக்கூறலையும் திடமாக நிச்சயப்படுத்துவதற்கு இது ஏதுவாக அமையும்.

இவ்வரலாற்று நிகழ்வில் உரையாற்றிய ட்ரான்ஸ்பேரன்சி இன்டர்நஷனல் நிறைவேற்றுப் பணிப்பாளர் அசோக்க ஒபேசேக்கர, தமது சொத்துக்கள் பற்றிய விவரங்களைப் பொதுமக்களுக்கு வெளிப்படுத்துவதற்காக முன்வந்த 5 நாடாளுமன்ற உறுப்பினர்களையும் வரவேற்றார்.

அவர் மேலும் கூறுகையில்–

அரசியல்வாதிகளின் சொத்து விவரங்களைப் பொதுத்தளத்தில் வெளியிடுமாறு கோரி மேற்கொண்ட பிரசாரத்தின் மைல்கல்லாக இதனைக் கருதுகின்றோம்.

இந்தச் செயற்பாடானது ஏனைய மக்கள் பிரதிநிதிகளையும் தமது சொத்து விவரங்களை வெளிப்படுத்துவதற்கு ஊக்குவிப்பதுடன் கேள்விகள் இன்றிப் பொது நலன் என்ற அடிப்படையில் தகவல்களை வழங்குவது அவசியம்.

இது வெளிப்படையான நாடாளுமன்றத்தைக் காட்டுவதுடன் வெளிப்படைத்தன்மை மற்றும் பொறுப்புக்கூறலை வலுப்படுத்துவதாகவும் அமையும் மக்களுக்கும் மக்கள் பிரதிநிதிகளுக்குமிடையிலான இடைவெளியைக் குறைக்கும். தகவல்கள் பொதுமக்களின் கரங்களில் சென்றால் அது, நல்லாட்சியின் திறவுகோலாகும். ட்ரான்ஸ்பேரன்சி இன்டெர்நஷனலின் நீண்டகால நிலைப்பாடும் இதுவேயாகும்–என்றார்.

ஊழலுக்கு எதிரான போராட்டத்தின் ஒரு பகுதியாக தாம் இதனை செய்துள்ளனர் என நாடாளுமன்ற உறுப்பினர்கள் ஐவரும் கூறியுள்ளனர்.

சுமந்திரனின் மாதாந்த சம்பளம் - 51,285 ரூபா மேலதிக கொடுப்பனவு - 239,255 ரூபா

வாசுதேவவின் மாதாந்த சம்பளம்–மேலதிககொடுப்பனவுடன் - 286,322 ரூபா

தாரக பாலசூரியவின் மாதாந்த சம்பளம்–மேலதிக கொடுப்பனவுடன் - 275,788 ரூபா

விதுர விக்கிரமநாயக்கவின் மாதாந்த சம்பளம் - 51,285 ரூபா மேலதிக கொடுப்பனவு-- 195,374.40 ரூபா

எரான் விக்கிரமரத்னவின் மாதாந்த சம்பளம் - 63,500 ரூபா. (ஐ)

## சீனத் தூதுவர் நேற்று ஹக்கீமுடன் பேச்சு

கொழும்பு, மார்ச் 01

சீன மக்கள் குடியரசின் இலங்கைக்கான தூதுவர் செங்க் குயுவான், ஸ்ரீ லங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைவர், நகர திட்டமிடல் நீர் வழங்கல் மற்றும் உயர் கல்வி அமைச்சர் ரவூப் ஹக்கீமை உயர் கல்வி அமைச்சில் சந்தித்துக் கலந்துரையாடினார்.



இதன்போது, இரு நாடுகளுக்குமிடையில் தொன்றுதொட்டு நிலவி வரும் நல்லுறவு, கலாசார பொருளாதார தொடர்புகள், மருத்துவம், பொருளியல், உயிரியற் தொழில்நுட்பம் போன்ற துறைகளிலான புலமைப்பரிசில், குடிதண்ணீர் மற்றும் கழிவு நீர் முகாமைத்துவச் செயற்திட்டங்களுக்கான ஒத்துழைப்பு போன்ற விடயங்கள் குறித்து பயனுள்ள கருத்துப்பரிமாறல்கள் இடம்பெற்றன எனத் தெரிவிக்கப்பட்டது. (ஐ)

## ஐ.தே.க. அரசு ஆட்சி புரியும்வரை மோசடியாளர் தண்டிக்கப்படார்!

### ஜனாதிபதி மைத்திரிபால காட்டம்

கொழும்பு, மார்ச் 01

ஐக்கிய தேசியக் கட்சி அரசு இருக்கும்வரை பிணைமுறி மோசடியாளர்கள் சட்டத்துக்கு முன் நிறுத்தப்படுவதற்கு வாய்ப்பில்லை என ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தெரிவித்துள்ளார்.

61ஆவது ஆண்டு பூர்த்தியை முன்னிட்டு தேசிய கணக்காளர் அலுவலகத்தில் நேற்று முன் தினம் புதன்கிழமை இடம்பெற்ற நிகழ்வொன்றில் உரையாற்றிய போதே அவர் இதனைக் குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்–

இலங்கையில் இடம்பெற்ற பெரும் நிதி மோசடிச் சம்பவமான மத்திய வங்கி பிணை முறி விவகாரம் தொடர்பாக ஆராய நியமிக்கப்பட்ட ஆணைக்குழு ஊடாக அதன் குற்றவாளிகள் யாரென நாட்டுக்குத் தெரியப்படுத்தப்பட்டுள்ளது.

ஆனால், ஐ.தே.க. அரசு இருக்கும் வரை அவர்கள் தண்டிக்கப்பட வாய்ப்பில்லை. அதுமாத்திரமின்றி இந்த அரசு இருக்கும்வரை மத்திய வங்கியின் முன்னாள் ஆளுநர் நாட்டுக்கு அழைத்து வரப்படுவதும் சாத்தியமற்றது.



மத்திய வங்கி பிணைமுறி மோசடி ஊடாக அரசு தம்மீது கொலன்னாவ குப்பை மேட்டைவிட அதிகமான குப்பையைப் போட்டுக் கொண்டுள்ளது–என்றார். (ஐ)

## கிழக்கில் கபாலி குழு!

### அடக்கக் கோருகிறார் சிறிநேசன் எம்.பி.

மட்டக்களப்பு, மார்ச் 01

வீடுகளை உடைத்து கொள்ளையிடுதல், மதுபோதையில் பெண்களிடம் சேஷ்டை செய்தல், வீதிகளில் செல்வோரை மிரட்டுதல் உள்ளிட்ட பல்வேறு துன்புறுத்தல்கள் மற்றும் குற்றச்செயல்களில் கபாலி குழு ஈடுபட்டுள்ளதாகவும், அந்தக் குழுவுக்கு எதிராக உரிய நடவடிக்கைகளை எடுக்குமாறும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பி னர் ஞா.சிறிநேசன் கேட்டுள்ளார்.



மட்டக்களப்பு, மண்முனைப்பற்று பிரதேச செயலாளர் பிரிவுக்குட்பட்ட மாவிலங்குதுறைப் பகுதியிலேயே இந்தக் குழுவின் அட்டகாசம் அதிகரித்துள்ளதென அவர் மேலும் கூறினார்.

மண்முனைப்பற்று பிரதேச அபிவிருத்திக்குழு கூட்டம் நேற்று முன்தினம் நடைபெற்றது. இதன்போதே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்–

ஆள்களை மிரட்டுதல் உள்ளிட்ட மக்களைத் தீண்டுகின்ற பல்வேறான அட்டகாசங்களைக் கபாலி என்பவரும் அவரது குழுவினருமே மேற்கொண்டு வருகின்றனர். அந்தக் குழுவைச் சேர்ந்தவர்கள் என்ற சந்தேகத்தின் பேரில் காத்தான்குடி பொலிஸாரால் சிலர் கைது செய்யப்பட்டு அழைத்துச் செல்லப்படுகின்றனர்.

எனினும் அவ்வாறு அழைத்துச் செல்லப்படுபவர்கள் சில நாள்களில் மீண்டும் திரும்பி வந்து விடுகின்றனர் என பொது அமைப்புகளால் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

பொலிஸாரால் உரிய நடவடிக்கைகள் எடுக்கப்படாத நிலையிலேயே இந்தக் குழுவினரின் அட்டகாசம் அதிகரித்து வருகிறது.

இந்த விவகாரம் தொடர்பில் காத்தான்குடி பொலிஸார் உரிய நடவடிக்கை எடுக்கவேண்டும் என்பதுடன், மட்டக்களப்பு மாவட்ட சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகரின் கவனத்துக்கும் கொண்டு செல்லப்படும்–என்றார். (ஐ)

## 'பொறுத்தது போதும்' எனக்கூறி பொங்கியெழும் மஹிந்த அணி

கொழும்பு, மார்ச் 01

கூட்டு எதிரணி பொறுத்தது போதும் என்ற தொனிப் பொருளில் மக்கள் பேரணிகளை எதிர்க்கட்சித் தலைவர் மஹிந்த ராஜபக்ஷவின் தலைமையில் நடத்தவுள்ளது.

முதலாவது பேரணி எதிர்வரும் 8ஆம் திகதி மாலை 3 மணிக்கு, கண்டியில் நடத்தப்படுமென நாடாளுமன்ற உறுப்பினர் டலஸ் அழகபெரும தெரிவித்தார்.

எதிர்க்கட்சி அலுவலகத்தில் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்து கொண்டு கருத்துரைக்கும்போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

ஆவர் மேலும் தெரிவிக்கையில்–

கண்டியில் ஆரம்பிக்கப்பட்டுப் பின்னர் நாடு முழுவதிலும் அரசுக்கு எதிராக 10 பேரணிகளை முன்னெடுக்கவுள்ளோம். ஜனாதிபதித் தேர்தல் நடக்கவிருக்கும் டிசெம்பர் மாதம் 7ஆம் திகதி வரை இந்தப் பேரணிகள் தொடர்ந்து முன்னெடுக்கப்படும்.

எதிர்க்கட்சிகளைப் பிரதிநிதித்துவப்படுத்தும் அனைத்து நாடாளுமன்ற, மாகாண சபை, பிரதேச சபை உறுப்பினர்கள் இந்தப் பேரணியில் கலந்துகொள்ள உள்ளனர்.

மத்திய வங்கிக்குள் யானைத் தாக்குதல் நடத்தி இன்றோடு நான்கு வருடங்கள். இதனால், ஒரு டிரில்லியன் ரூபா நட்டம் ஏற்பட்டது என இந்த ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டிருந்த நாடாளுமன்ற உறுப்பினர் மஹிந்தானந்த அளுத்கமகே தெரிவித்தார்.

இதேவேளை, மார்ச் மாதம் ஆரம்பிக்கப்படும் அரசுக்கு எதிரான போராட்டங்கள், இறுதியாக டிசெம்பர் மாதம் கதிர்காமத்திலிருந்து கொழும்புக்கு பாதயாத்திரையோடு நிறைவு செய்யப்படுமெனவும் அவர் இதன்போது தெரிவித்தார்.

ஐக்கிய நாடுகளின் மனித உரிமை பேரவையில் இலங்கை அரசு இணை அனுசரணை வழங்கி, 2015ஆம் ஆண்டு நிறைவேற்றப்பட்டுள்ள 30/1 தீர்மானத்திலிருந்து இலங்கை அரசு விலக வேண்டும் என இந்த ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்து கொண்ட நாடாளுமன்ற உறுப்பினர் உதய கம்மன்பில தெரிவித்தார்.

19ஆவது திருத்தச் சட்டம் ஒரு குடும்பத்தை மாத்திரம் இலக்கு வைத்து கொண்டுவரப்பட்டுள்ளது.

இந்தத் திருத்தச் சட்டத்தால், நாட்டின் அனைத்துப் பிரச்சினைகளுக்கும் தீர்வு ஏற்படுமென தெரிவிக்கப்பட்டிருந்தாலும், இந்த திருத்தத்தின் பின்னரே நாட்டில் பிரச்சினைகள் ஆரம்பித்தது என இந்த ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்து கொண்ட நாடாளுமன்ற உறுப்பினர் கெஹெலிய ரம்புக்வெல குறிப்பிட்டார்.

இப்பத்திரிகை யாழ்ப்பாணம் இல.30 இந்துக் கல்லூரி வீதியிலுள்ள காலைக்கதிர் பிறஸ் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 672B கே.கே.எஸ் வீதியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 01.03.2019 இல் அச்சிடப்பட்டு வெளியிடப்பெற்றது.